உ

சிவமயம்

# கந்தபுராணச் சுருக்கம்



ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்
முன்னேஸ்வரம்
சிலாபம்.
03-10-2018

உ
சிவமயம்

# கந்தபுராணச் சுருக்கம்

ஆசிரியர்:

## பிரம்மஸ்ரீ. க. குருமூர்த்திஐயர்

பதிப்பாசிரியர்

**பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்**

B.A (Hons), PG Dip in Edu, M.Phil
தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர், சமஸ்கிருதத்துறை,
கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இந்நூல்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகப் பேராசிரியர்

## பேராசிரியர் கலாநிதி மா.வேதநாதன்

அவர்களது

**சேவை நலனைப் பாராட்டி வெளியிடப்படுகின்றது.**

ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்
முன்னேஸ்வரம்
சிலாபம்.
03-10-2018

**கந்தபுராண சுருக்கம்** பதிப்பாசிரியர் : ச.பத்மநாபன் / முதற்பதிப்பு : கலி. 503 (1929) மீள் பதிப்பு 2018 / வெளியீடு : ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தானம், முன்னேஸ்வரம், சிலாபம்/ பக்கம் : xiv + 60/ தாள் : 70கி. / அச்சு : குரு பிறிண்டேர்ஸ் 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

ISBN :

# முன்னுரை

முருகப் பெருமானது தெய்வீகவியல் வரலாறு கூறும் புராண நூல் கந்தபுராணம் ஆகும். இப்புராணம் காஞ்சிபுரம் கச்சியப்ப சிவாச்சாரி யாரால் கி.பி 12ஆம் நூற்றாண்டில் வடமொழி ஸ்காந்த மஹா புராணத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. கந்தசுவாமியால் "திகடசக்கர" என அடியெடுத்துத்துக் கொடுக்க அதனை கச்சியப்பசிவாச் சாரியார் ஆறுகாண்டங் களையும் 10346 பாடல்களையும் கொண்டதாக அமைத்தார். இப்புராணம் சைவசித்தாந்த சாஸ்திர நுட்பங்களை சாஸ்திரமாகவும் இலக்கியமாகவும் கூறும் நூலாக விளங்குகின்றது.

யாழ்ப்பாணத்து சமுதாயத்தில் கந்தபுராணபடனம் தலையாயது. வீடுகள் தோறும் பெண்களும் கந்தபுராணத்தை பயனுடன் ஓதி யாழ்ப்பாணச் சமுதாயத்தையே வளம்படுத்திய பெருமையுடையது. ஆறு காண்டங்களுமே பல்வேறு உபகதைகளினை உள்ளடக்கியது.

ஏட்டு வடிவிலிருந்த கந்தபுராணத்தை முதன்முதலில் பதிப்பித்த பெருமை யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களையே சாரும். அதே போல் கந்தபுராண சூசனம் எழுதியமையும் கந்தபுராணத்தை வசனமாக எழுதியவரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரே ஆவார்.

யாழ்ப்பாணச் சமுதாய மரபில் சைவமும் தமிழும் சைவ சித்தாந்த வாழ்வியலாக மலருவதற்கான அடியூற்றே கந்தபுராணச் செல்வாக்கு எனில் மிகையாகாது. இதனையே பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளை யாழ்ப்பாணக் கலாச்சாரத்தை "கந்தபுராணக் கலாச்சாரம்" என்றார். இதனது தாக்கத்தினை கோயில்கள் தோறும் நடைபெறும் கந்தபுராண படனத்தைக் கொண்டு நோக்க முடியும். அதே போன்று கந்தபுராணத்திற்கு உரையெழுதியவர்களுள் பலர் இலங்கையர் களேயாவர்.

கந்தபுராண விடயத்தினை சுருங்கக்கூற விழைந்தவர்கள் பலர். காசிவாசி செந்தில்நாதையர் "கந்தபுராண நவநீதம்" எனும் நூலை எழுதினார். இதே போன்று கந்தபுராணத்தின் உபபிரிவுகள் பலவும்

தனித்தனியாக பதிப்பிக்கவும், உரையெழுதவும் பட்டமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

கந்தபுராணம் சுருக்கம் எனும் இந்நூலை எழுதியவர் வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் ஸ்ரீகண்ணலிங்கசுவாமி கோவில் பிரதம குருவும் அறங்காவலருமான பிரம்ம ஸ்ரீ க.குருமூர்த்தி ஐயர் ஆவார். இவர் மிகச்சிறந்த தமிழறிஞர், சுன்னாகம் ஸ்ரீ அ.குமாரசுவாமிப்புலவர், நல்லூர் ஸ்ரீ த.கைலாச பிள்ளை ஆகியோரின் மாணாக்கராவார். வீரசோழியம் எனும் இலக்கணநூலை விளக்கக்குறிப்புடன் பதிப்பித்தவர். சிறந்த உரையாசிரியர் சம்ஸ்கிருத மொழியை நன்கறிந்தவர். இவர் (கலி.5031) 1929 ஆம் ஆண்டில் பதிப்பித்து வெளியிட்ட இந்நூல் கிடைப்பது மிகவும் அரிதானதாகும். அந்நூலை 89 ஆண்டுகளின் பின் அதே வடிவில் பதிப்பித்து வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

கந்தபுராணச்சுருக்கம் எனும் இந்நூலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகப்பேராசிரியர் சித்தாந்த ரத்தினம் பேராசிரியர் கலாநிதி மா.வேதநாதன் அவர்களது சைவசித்தாந்தப் பணியினை கௌரவிக்கும் வகையில் வெளியிட்டு வைப்பதில் பெருமகிழ்வடைகின்றேன். பேராசிரியர் மா.வேதநாதன் சிறந்த சிவபக்தன், நயினை நாகபூசணி அம்பாளின் சேவகன், குருபக்திமிக்கவர், இளகிய மனம் கொண்டவர், மென்மையானவர், இரண்டு அனைத்துலக சைவ மாநாடுகளை நடாத்திய சாதனை வீரர், அடக்கமுடையவர், நிறை வானவர். இத்தகைய பெருந்தகையின் குருத்துவ சேவையைப் பாராட்டும் முகமாக இந்நூலை வெளியிட்டு வைப்பதில் பெருமித மடைகின்றேன்.

முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவம்பிகா சமேத ஸ்ரீமுன்னநாதசுவாமி திருவாளர் பேராசிரியர் ம.வேதநாதன் மனவலிமையுடன் பல்லாண்டு காலம் வளமுடன் வாழவேண்டும் எனப்பிரார்த்திக்கின்றேன்.

இவ்வரிய நூலின் பிரதியை எமக்கு உவந்தளித்த யாழ்ப்பாண பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் திருவாளர் தி.செல்வமனோகரன் அவர்களுக்கும், இந்நூலை அழகுற அச்சிட்டுத்தந்த குரு பிரிண்டர்ஸ் நிறுவனத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சைவத்திற்கும் தமிழிற்கும் தொண்டாற்றிய எமது மூதாதையரின் ஆக்கங்கள் பலவும் மீள்வடிவம் பெற்று அழியாநிலை பெற உதவவேண்டும் என அறிஞர்களை வேண்டிக்கொள்கின்றேன்.

இந்நூலினை பலரும் பயன்பெற வேண்டும் என ஸ்ரீ வடிவாம் பிர சமேத ஸ்ரீ முன்னநாதசுவாமியின் திருவடிகளில் திரிகரண சுத்தியுடன் சமர்ப்பணம் செய்கின்றேன்.

**ச.பத்மநாபன்**
தலைவர்
சிரேஷ்ட விரிவுரையாளர்
சம்ஸ்கிருதத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பிரதம குருவும் தர்மகர்த்தாவும்,
ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்,
முன்னேஸ்வரம்
சிலாபம்
03.10.2018

உ

கணபதிதுணை

திருச்சிற்றம்பலம்.

# கந்தபுராணச் சுருக்கம்.

இஃது

வட்டுக்கோட்டை

கண்ணலிங்கேசுரசுவாமீகோயில்

யஜமானாகிய

## குருமூர்த்தி ஐயரவர்கள்

கத்தியரூபமாகச்செய்தது.

யாழ்ப்பாணம்

செந்தமிழ்ப்பரிபாலன யந்திரசாலையில்

அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

கலி. ௫௦௯௧.

இச்சிறுநூல்

எனது ஆசிரியர்களாகிய

நல்லூர்

ஸ்ரீ. த. கைலாசபிள்ளை அவர்களுக்கும்

சுன்னாகம்

ஸ்ரீ அ. குமாரசுவாமிப்புலவர்

அவர்களுக்கும்

அர்ப்பணமாகக் கடவது.

சிவமயம்.

# முகவுரை.

வேதாகமங்களிலே விலக்கப்பட்ட பாவங்களை நீக்கி விதிக்கப்பட்ட புண்ணியங்களைச் செய்து சிவபெருமானை வழிபடுபவர்கள் சைவசமயிகள் என்று சொல்லப்படுவார்கள். இந்தச்சைவசமயிகளுக்குச்சிவபெருமானுடைய பெருமையைச் சொல்லும் சிவபுராணங்களைக்கேட்டலும் இன்றியமையாதவோரிலக்கணமாம். சிவ்புராணங்களுள்ளே, ஸ்காந்தபுராணம், சனற்குமார சங்கிதை, சூதசங்கிதை, பிரமசங்கிதை, விஷ்ணுசங்கிதை, சங்கரசங்கிதை, சூரசங்கிதை என்னும் ஆறுசங்கிதையுடையதாய் ஐம்பதுகண்டங்களாற் புனைபப்பட்டிருக்கும். இந்தச் சங்கிதை ஒவ்வொன்றும அனேகம் கிரந்தங்களையுடையன. அவற்றுள், சங்கரசங்கிதை முப்பதினாயிரங் கிரந்தமுடையதாய்ப் பன்னிரண்டு கண்டங்கள் பொருந்தியதாய் இருக்கும். அக்கண்டங்களுள் முற்பட்டது சிவாகசிய கண்டம். அதுபதின் மூவாயிரங் கிரந்தமுடையதாய், சம்பவகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம், உபதேசகாண்டம் என ஏழு காண்டங்களையுடையதாயிருக்கும. அவற்றுள், முதலாறு காண்டத்தையும் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், "கந்தபுராணம்" எனப்பெயரிட்டுத்தமிழில் அருளிச் செய்தனர். ஏழாவதாகிய உபதேசகாண்டத்தைக் கோனேரியப்ப முதலியார் தமிழில் அருளிச்செய்தனர்.

கந்தபுராணத்தையருளிச்செய்த கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், காஞ்சிபுரத்திலே, ஆதிசைவப் பிராமணகுலத்திலே காளத்தியப்ப சிவாசாரியருக்குப் புத்திரராகத் திருவவதாரஞ்செய்து, வேதாகமங்களையும், வேதாங்கங்களையும், தமிழில் தொல்

காப்பிய முதலிய இலக்கண நூல்களையும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு முதலியவைகளையும் தேவாரம் முதலிய பதினொருதிருமுறைகளையும் கற்றுத் தெளிந்தவர். கந்தபுராணத்தைத் தமிழிற்பாடும்படி கட்டளையிட்டு, "திகட சக்கர செம்முகமைந்துளான்" என்று அடியெடுத்துக் கொடுத்து, பாடும்பொழுது சிலதிருத்தங்களைச் செய்தவர் சங்கப்புலவராகிய சுப்பிரமணியக்கடவுளேயாவர். கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் இப்புராணத்தை அரங்கேற்றும் பொழுது காப்புச் செய்யுளிலே உள்ள முதலடியை வாசித்தருளி "திகடசக்கரம்" என்பதை, திகழ் தசக்கரம் என்று பதச் சேதம்பண்ண; ஒரு புலவர் இவ்விரண்டுபதங்களும் இவ்வாறு புணர்தற்கு விதி ஒரிலக்கண நூலினுமில்லை யென்றுவாதித்தார். கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள், "நாளையதினம் இலக்கணவிதி காட்டப்படும்." என்று அருளிச்செய்து, இராத்திரிகால பூசைமுற்றியபின் தரையிலே சயனித்தருளினர். சுப்பிரமணியக்கடவுள் அவருக்குச்சொப்பனத்திலே தோன்றி, "நாளையதினம் விதிகாண்பிப்போம்" என்று அருளிச்செய்தார்.

அடுத்தநாள், கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் புராணம் அரங்கேற்றத் தொடங்கிய பொழுது, சுப்பிரமணியக் கடவுள் ஒருபுலவர் வடிவுகொண்டு எழுந்தருளிவந்து தமது கரத்திலிருந்தவீரசோழியத்தில், "நான் கொடு" (சந்தி. கஅ) என்னும் செய்யுள், திகழ் தசக்கரம் என்பன திகடசக்கரம் எனப் புணர்தற்கு விதி என்பதையுணர்த்தி மறைந்தருளினர். அருணகிரிநாதசுவாமிகளும் இதனையுட்கொண்டு,

திருப்புகழில்,

"முற்பட்ட விலக்கண நூலிடை
தப்புற்ற கவிக்கென வேயவை
முற்பட்டுப் புதுத்துறை மாறிய—புலவோனே"

என்றருளிச் செய்தனர். இலக்கணநூல், குமாரகம், தப்புற்றகவி,

திகடசக்கரம் என்னும் இக் கந்தபுராணக்காப்புச் செய்யுள். அவை, சபை. புறத்துறை, வீரசோழியம். இவ்வாறு இக்கந்த புராணம் அரங்கேறியது எழுநூறும் சகாத்தத்தில். கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் இவ்வாறு கந்தபுராணத்தை அரங்கேற்றி "வேற்றனி நாயகன் புராண, நன்னுபக மாமெனக் கொள்க விஞ் ஞாலமெல்லாம்." (வள்ளி. உ௬௫) என ஆணையிட்டுமந்திரமாக்கிப் பின்னும் சிலகாலம் வாழ்ந்திருந்து சிவத்தோடுகலந்து பேரின்ப வாழ்க்கையுற்றார்.

சுப்பிரமணியக்கடவுள் வாழ்த்தில் சீரலைவாய்,ஆவினன்குடி, ஏரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை எனநக்கீரர்வகுத்த வாறுசுப்பிரமணியக்கடவுள்வீற்றிருக்குமிடங்களைக்கூறுதலானும் "பொய்யற்றகீரன்முதலாம்புலவோர்புகழ்ந்த, வையற்கு"(வள்ளி உ௬௪) எனக் கூறுதலானும் இக்கச்சியப்பசிவாசாரியசுவாமிகள் நக்கீரரிலும் அவர் அருளிச்செய்த திருமுருகாற்றுப்படை யிலும் நன்கு மதிப்புடையர் என்று தெளியலாம். குமாரசம்ப வித்தில் "அஸ்தியுத்தாஸ்யாம்", (குமார. க.) என்னும் ஸ்லோ கத்தை, "குடகடல் குணகடல் கூடுறுவகை." (பார்ப்பதி. கஅ) என்னும் செய்யுளால் மொழிபெயர்த்தருளுவர். தியானங்களைத் தோத்திர செய்யுள்களிலும் தியாசங்களை விசுவரூபச் செய்யுள் களிலும் இவ்வாறே மொழி பெயர்த்தருளுவர். "எந்தையுமை தேர்ந்திட வியம்பிய குமார, தந்திரநெறிப் படிதவாது" (மீட்சி உ௪) எனக் கூறுவதால் இவாது ஆகமவிருப்பு இத்தன்மையதெ ன்று தெளியத்தகுந்ததன்று. "மாவும், புள்ளுமயங்கல் பொரு ளுற்றுணிபன்றோ" (வள்ளி. ௯க.) எனக்கூறுதலானும் வள்ளி யம்மை திருமணப்படலத்தில் துறைகளை அகப்பொருளிலக்கண த்திற்கேற்ப திரல்படவைத்துச் சரித்திரத்தை அவற்றுடன் அபின்னமாக்கிக் கூறுதலானும் இவரது பொருளதிகார வன்மை துணியப்படும். இன்னும், இந்நூலில் வாராத சமயசாரங்களும், இலக்கணநயங்களும், அமைச்சியல்களும், தர்க்கரீதியான வாதங் களும், வர்ணனைகளும் இவை போன்ற பிறவும் கிடையா. அவை களை விரிவஞ்சி விடுத்தேன். இத்தக்கச்சியப்ப சிவாசாரிய சுவாமி களைப் பின்பற்றியே பின்வந்த கம்பநாடர் முதலிய புலவர்கள் காப்பியங்களைச் செய்யத் தொடங்கினார்கள்.

கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் அருளிச்செய்த கந்தபுராணம் சமுத்திரம் போற்பரந்திருத்தலினால் அதனைச் சுருக்கிக் "கந்தபுராணச்சுருக்கம்" எனப்பெயரிட்டுச் சம்பந்தசரணாலய சுவாமிகள் பத்தியரூபத்திற் செய்தார். இது, "பல்வகைப்பொருளைச், செவ்வனடியிற் செறித்தினிதுவிளக்கி" (நன். பாயி. சஅ) என்றவாறு கந்தபுராணசாரம் முழுவதையும் விளக்குவது. இக்காலத்தில் புராணவறிவு உலகத்தில் குன்றிவருதலால் கதையேனும் உலகத்தில் விளங்குவது நன்று என்று எண்ணி இக்கந்தபுராணச்சுருக்கத்தைத்தழுவி இந்நூலை இயற்றி, இதற்கு முதனூற் பெயராகிய "கந்தபுராணச் சுருக்கம்" என்னும் பெயரையே இட்டு வெளிப்படுத்தினேன். இளமையையுடைய எனக்கும் இக்கதைக்கும் எவ்வளவோ தூரமாயினும் சுப்பிரமணியக்கடவுளது பெருமை பரவுதல் வேண்டும் என்னும்பேராவாவினால்இவ்வாறு செய்தேன்.

| | |
|---|---|
| வட்டுக்கோட்டை<br>கண்ணலிங்கேசுரசுவாமி<br>கோயில். | இங்ஙனம்<br>க. குருமூர்த்தி ஐயர். |

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# கந்தபுராணச்சுருக்கம்.

## பாயிரம்.

### கடவுள்வணக்கம்.

விநாயகர் காப்பு.

பொங்கு கந்த புராணச் சுருக்கநா
லிங்கிசைத்திட லின்பொடு முற்றுவான்
மங்கை பாலகன் மாதங்க மாமுகப்
புங்க வன்றுணைப் பொற்பதம் போற்றுவாம்.

சிவபெருமான்.

சீர்கொண்ட வானந்த மாகி யெங்குஞ்
செறிவாகிப் பரமாகித் திரமதாகி
யேர்கொண்ட கருணைதிரு வுருவமாகி
யெழில்கொண்ட மலைமகளையிடத்திற்கொண்டோன்
கார்கொண்ட நிறங்கொண்ட முகுந்தனுதிக்
கடவுளர்வந் தடிபரவுங் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியனவ னடியைத் தாழ்ந்து
தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம்.

## கந்தபுராணச் சுருக்கம்

### சிவசத்தி.

மாற்கரிய செம்பதத்தோன் றேவியாகி
    வல்வினையே னனைதாவிக் காவியாகி
மேற்கருணைத் திருவுருவ முடையாளாகி
    வித்தகமா யைந்தொழிற்கும் வித்தாய்நின்ற
சேற்கருங்கட் டளவநகைக் களபக்கொங்கைச்
    சிற்பரையிங் கெமையாளு முமையாள்செம்பொற்
காற்கமலந் தலைக்கமலம் பொருந்தத்தாங்கிக்
    கைக்கமலங் குவித்தருந்துங் கமலந்தீர்வாம்.

### விநாயகக்கடவுள்.

மாவேலை யாலமதை யடக்கித்தன்னுள்
    மண்டுலக மண்டமெலாம் வளர்ந்துதானோர்
காவேயின் முன்னுதித்த வரசிற்றோன்றிக்
    கடம்புபுனை குருந்தினுக்குத் துணையதாகித்
தூவேதந் தலைகாண்டற் கரியதாகித்
    துன்பமுறு பிறவியெனுந் துகள்சேர்வெய்யி
லாவேனைத் தன்னடியா நிழலிற்சேர்த்த
    வத்திதனைப் பத்திசெய்து முத்திசேர்வாம்.

### சுப்பிரமணியக்கடவுள்

தேவர்குலப் பெருங்கமல மிடுக்கணுன
    இழிரமகன் றனியோடு சிறந்துவாழ
மாவலிசே ரவுணர்குலக் குவளைவாடி
    மண்ணினிடைச் சுருங்கியிட வந்தபானு
தூவடிவேற் குமரேச னடியேன்புன்
    சொல்லினுக்கு மிரங்கியருள் சுரக்கும்பெம்மான்
பூவடியா மிருபோது மூன்றுபோதும்
    பூசைபுரிந் தன்பினொடு புகழ்ந்துவாழ்வாம்.

### வீரவாகுதேவர்.

பொங்குகிரி களிற்றலைமை யோதம்போதப்
    பொற்புடைய பொற்கிரிமுன் னிற்குமாபோற்

றங்குதிறற் புகழ்வீரர் தம்மையெண்ணிற்
　　ஞனேமுன் னெண்ணவருந் தலைமையாளன்
பங்கமிலா நீடுலகை மூடுமல்லின்
　　பகைவனவன் பகைவனவன் பகைவனுனேன்
மங்கலிலாப் புகழ்வீர வாகுவாய
　　வரிசிலைக்கைக் குரிசிலையாம் வணங்கல்செய்வாம்,

சைவசமயாசாரியர்கள்.

வெங்குருவிற் சற்குருவா யுதித்துக்கூடன்
　　மீனவன்மேல் வினைதீர்த்தோன் விரைத்தாள்போற்றி
துங்கமுறு மலைகடலிற் சிலையதான
　　தோணியில்வந் தவன்பாத தூளிபோற்றி
யெங்கள்பிரான் றனையிருளிற் பரவைவாசற்
　　கேவல்கொண்டோன் பதப்பதும விருதாள்போற்றி
புங்கவர்சூழ் திருவாத வூரில்வந்த
　　புண்ணியனு ரிணையடிகள் போற்றிபோற்றி.

கச்சியப்பசிவாசாரியர்

போதமுறு சூதமுனி புகன்றகாந்தப்
　　புகழ்க்கடலிற் படிந்ததன்கட் பொருளதான
மேதகுவண் புனலருந்தி வையமுய்ய
　　வெய்யதுயர்ப் பிறவியெனும் வெம்மைதீரத்
தாதவிழ்பூம் பொழிற்காஞ்சிக் குவட்டிலேறிச்
　　சலதியமு தினிகர்செந் தமிழதான
காதன்மழை பொழிந்தவருட் கொண்டலான
　　கச்சியப்ப னிருபாத முச்சிவைப்பாம்.

நூல்வந்தவழி.

நன்புவி யிடத்துமிக்க நைமிச வனத்துவாழுந்
துன்பில்சீர் முனிவர்கேட்பச் சூதனங் குரைத்தகாந்த
மின்புறு கச்சியப்ப னியம்பினன் றமிழாலன்னு
னன்புறுதமிழைப்போற்றி யறிந்தவா சுருக்கிச்சொல்கேன்.

## அவையடக்கம்.

கருக்கடன் முருக்கிமுத்திக் கரைதரு காந்தநூலைச்
சுருக்கவே கல்வியில்லாத் தொண்டனேன் றுணிந்தவாறு
திருக்கில்வான் முழுதுமிங்கோர்செங்கையிலடக்குவேனென்
றுருக்கா மில்லானெண்ணு மூக்கமே போன்றதன்றே.

அத்தமுஞ் சொல்லுஞ்சொல்லு மாதிமா தாதலானு
மெத்திய வனப்புவேலோன் வியன்கதை யுறுதலானும்
பித்தனேன் றனதுவாக்கிற் பிழைகள்வந் திடினுந்தீர்த்திட்
டுத்தமர் கொள்வரென்னு முரத்தினா லுரைக்கலுற்றேன்.

பாயிரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

# புராணவரலாறு.

தொண்டைமண்டலத்திலே, காஞ்சிபுரத்திலே, விஷ்ணுமூர்த்தியானவர் கூர்மாவதாரம் எடுத்த பொழுது பூசித்த கச்சபாலயத்துக்கு, அந்த விஷ்ணுமூர்த்தியின் புத்திரராகிய பிரமதேவர் சிவபெருமானைப் பூசிக்கும் பொருட்டு வந்தார். அப்பொழுது முனிவர்களெல்லாம் ஒருங்குதிரண்டு அவரிருக்குமிடத்தையடைந்து அவருக்கு வணக்கஞ்செய்து, "சுவாமீ, அடியேம் தவஞ்செய்யத் தகுந்தவிசேஷமுடைய ஓரிடத்தைக்காட்டவேண்டு"மென்று விண்ணப்பஞ்செய்தார்கள். அதனை அந்தப்பிரமதேவர் கேட்டு ஒரு தருப்பையை எடுத்து வளைத்துப் பூமியிலே உருட்டிவிட்டு; முனிவர்களைப்பார்த்து, "முனிவர்களே, நீங்கள் இது சென்று நிற்கும் வனத்தையடைந்து தவஞ்செய்யக்கடவீர்கள்" என்று திருவாய்மலர; முனிவர்களும் அதுகேட்டு, அந்தத்தருப்பையினாற் செய்தநேமியின் பின்னே சென்று, அதுதங்கிய வனத்தில் இருந்து தவஞ்செய்தார்கள். நேமிதங்குதலினால் அவ்வனத்துக்கு "நைமிசாரணியம்" என்று பெயருண்டாயிற்று.

புராணங்களையெல்லாம் முற்றவுணர்ந்த சூதமுனிவர், இந்த நைமிசாரணியத்திலே முனிவர்களெல்லாருமிருப்பதையறிந்து அவ்விடத்துக்கு வந்தார். அப்பொழுது முனிவர்கள் அவரையெதிர் கொண்டழைத்துச்சென்று தமது ஆச்சிரமத்தின்நடுவே ஒருபீடம் இட்டு அதிலிருக்கச்செய்து, அழலிடைப்பட்ட நெய்போல மனங் கசிந்துருகிவழிபட்டு அவரைநோக்கி, "சுவாமீ, தேவரீர் சிவபெருமானது புதல்வராகிய சுப்பிரமணியக்கடவுளின் சரித்திரத்தை உபதேசிக்கவேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். சூதமுனிவர் அதனைக்கேட்டு அந்த முனிவர்கள்மீது கிருபாநோக்கஞ்செய்து, "முனிவர்களே, சுப்பிரமணியக் கடவுளின் சரித்திரத்தைச் சொல்பவர்களும் கேட்பவர்களும் எழுவகைப்பிறவியினும் புரிந்த வினைகளெல்லாம் நீங்கிமோக்ஷமடைவார்கள். நீங்கள் அச்சரித்திரத்தை என்னிடம் அவாவுடன் கேட்டலால் சொல்லுகின்றேன் கேட்பீர்களாக" என்று சொல்லிப்பின்னும் அவர்களைப்பார்த்து, "முனிவர்களே, ஆதிகற்பத்திலே சிவபெருமான் அருளிச்செய்த வேதங்கள் முதலும் முடிவும் தடுமாற்றமுற; முனிவர்களும் தேவர்களும் மானிடர்களும் சிவபெருமானை வழிபடல் நீங்கிவேறுவேறு தேவர்களை வழிபட்டுப் பலவகைப்பட்ட நூதனசமயங்களின் வழி ஒழுகி வந்தார்கள். அப்பொழுது விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும் இந்திரன் முதலிய தேவர்களும் திருக்கைலாசமலையையடைந்து திருநந்திதேவராலே சிவபெருமானின் உத்தரவைப்பெற்றுக்கொண்டு, உள்ளே சென்று சிவபெருமானுடையசந்நிதானத்தையடைந்து தோத்திரஞ்செய்துவணங்கி நின்றார்கள். அப்பொழுது சிவபெருமான் அவர்கள்மீது திருவருள்பாலித்து "உங்கள் அரசநெறிகளெல்லாம் நன்றாகநடக்கின்றனவா" என்றுவினவியருளினார். விஷ்ணுமூர்த்தியானவர் அதனைக்கேட்டு, "சுவாமீ, முழுமுதற்கடவுளாகிய தேவரீரையன்றி நம்போன்ற பசுக்களையும் உலகத்துள்ளவர்கள் வணங்கிக்கெடுகின்றார்கள்; அதற்கு அருள் புரிய வேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்தார். சிவபெருமான் அதனைத் திருச்செவிசாத்தி விஷ்ணுமூர்த்தியை நோக்கி,

"விஷ்ணுமூர்த்தியே, நீ உனது கலைகளுள் ஒன்றுடனே நிலவுலகத்தில் அவதரித்து, வியாதன் என்று பெயர்தாங்கி, நாம் அருளிச்செய்த வேதத்தை நான்காக வகுத்து, அவ்வேதத்தையுணராதவர்கள் பொருட்டுநாம் நந்திக்கு அருளிச்செய்த பதினெண்புராணத்தையும் அவனிடம் உபதேசம்பெற்ற சனற்குமாரமுனிவனிடம் உபதேசம் பெற்று வாழ்வாயாக" என்று அருளிச்செய்தார். விஷ்ணுமூர்த்தியானவர் இதனைக்கேட்டுப் பின்னும் அவரை வழிபட்டு விடைபெற்றுக்கொண்டு தமது வைகுந்தலோகத்தையடைந்து பிரமாமுதலியதேவர்களை அவர்கள் ஸ்தானத்தையடையும்படி கட்டளைசெய்து அனுப்பிவிட்டனர்.

பின்பு, விஷ்ணுமூர்த்தியானவர் பிரமதேவரது வழியிலே பராசரமுனிவருக்கும் யோசனகந்திக்கும் புத்திரராக கங்கையாற்றிடைக்குறையிலே திருவவதாரஞ்செய்து வெதரிகாச்சிரமத்தையடைந்து தவஞ்செய்து முன்னுணர்விலே வேதத்தை இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்காகவகுத்து; பின்பு சனற்குமாரமுனிவரிடத்துப் பதினெண்புராணங்களையும் உபதேசம்பெற்று அடியேனுக்கு உபதேசித்து, "எல்லாருடைய பாவங்களும் நீங்க இதனை உபதேசிப்பாயாக" என்று எனக்கு ஆஞ்ஞாபித்தார். அவர் எனக்கு உபதேசித்த புராணங்களுள்ளே சிவபெருமானுக்குப் பத்துப் புராணங்களும்; விஷ்ணுமூர்த்திக்கு நான்கு புராணங்களும்; பிரமதேவருக்கு இரண்டு புராணங்களும்; அக்கினிதேவனுக்கு ஒருபுராணமும்; சூரியனுக்கு ஒருபுராணமும் உரியவாய் அவரவர் கீர்த்தியைச்சொல்லும். சிவபெருமானுடைய கீர்த்தியைச் சொல்லும் புராணங்கள்: சைவம், பௌடியம் மார்க்கண்டேயம், இலிங்கம், காந்தம், வராகம், வாமனம், மச்சம். கூர்மம், பிரமாண்டம் என்பன. விஷ்ணுமூர்த்தியினுடைய கீர்த்தியைச் சொல்லும் புராணங்கள்: காருடம், நாரதீயம், விண்டு, பாகவதம் என்பன. பிரமதேவரது கீர்த்தியைச்சொல்லும் புராணங்கள் பதுமம்பிரமம் என்பன சூரியனது கீர்த்தியைச்சொல்லும் புராணம்: பிரமகைவர்த்தம் என்பது. அக்கினிதேவனது

கீர்த்தியைச் சொல்லும் புராணம்; ஆக்கினேயம் என்பது; என்று அருளிச்செய்து சிவபெருமானுடைய கீர்த்தியைச் சொல்லும் பத்துச் சிவபுராணங்களுள்ளே காந்தபுராணத்திலே உமாதேவியார் இமயமலையரசன் புத்திரியாகத்திருவவதாரஞ் செய்தது தொடங்கிச் சுப்பிரமணியக்கடவுள் தெய்வயானையம்மையையும் வள்ளிநாயகியம்மையையும் திருமணஞ்செய்ததுவரையும் சுருக்கிச்சொல்ல அதனைக்கேட்டமுனிவர்கள் "சுவாமீ, இது கேட்குந்தோறும் பரமானந்தத்தைக் கொடுக்கின்றது; ஆதலால் விரித்துச் சொல்லவேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்ய அவர்சொல்லுவாராயினர்.

புராணவரலாறு முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

# க. உற்பத்திகாண்டம்.

திருக்கைலாச மலையிலே சிவபெருமான் உமாதேவியார் வாமபாகத்திலே பொருந்த வீற்றிருந்தபொழுது ஒருநாள் உமாதேவியார் எழுந்து அவரைவணங்கி, "சுவாமீ, நான் முன்னே தக்கனுக்குப் புத்திரியாக அவதரித்துத் தாக்ஷாயணி என்னும் பெயர்பெற்றேன். அந்தப்பெயரோ இன்னும் என்னைவிட்டு நீங்கவில்லை. அது நீங்கும் வண்ணம் அருள்செய்தல் வேண்டும்." என்றார். சிவபெருமான் அதனைக்கேட்டுத் தமது சத்தியாகிய அவ்வுமாதேவியை நோக்கி, "உமையே, உன்னைப்புத்திரியாகப் பெறும்பொருட்டு இமயமலையரசன் தவஞ்செய்கின்றான்; அவனுக்குப் புத்திரியாகச் செல்லுதி" என்றுகட்டளையிட்டார். அக்கட்டளையைப் பெற்றுக்கொண்டு இமயமலையிற்சென்று அங்கேயுள்ள பதுமையென்னும் தடாகத்திலே ஒருதாமரைமலரிலே குழந்தைவடிவங்கொண்டு வீற்றிருந்தார். பின்பு, இமயமலையரசன் அங்கே வந்து அக்குழந்தையைக் கண்டு எடுத்துக்கொண்டுபோய்த் தனது மனைவியாகிய மேனையிடத்திற் கொடுத்தான். உமாதேவியா அங்

கேயிருந்து ஐந்துவருஷம் வளர்ந்தபின் சிவபெருமானோடு சேரத் தவஞ்செய்ய எண்ணங்கொண்டு அவ்வெண்ணத்தைத் தமது தந்தையாகிய மலையரசனுக்குச் சொல்லி அவன்றடுத்தும் அதனைப் பொருட்படுத்தாது அவ்விமயமலையிலே அம்மலையரசனாற் செய்யப்பட்ட பருணசாலையிலே இருந்து தவஞ்செய்தார். அந்தக்காலம், சிவபெருமானிடம் வலிய வரங்களைப்பெற்ற சூரபன்மன் மகேந்திர புரத்திலேயிருந்து ஆயிரத்தெட்டு அண்டங்களினும் தனது ஆஞ்ஞாசக்கரத்தைச் செலுத்தித் தேவர்கள் குற்றேவல் செய்ய அரசுபுரியுங் காலமாயிருந்தது.

இப்படிப்பட்ட காலத்திலே, முன் சிவபெருமானிடம் வேதார்த்தையுணர்ந்த சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்னும் நான்கு முனிவர்களும் திருக்கைலாசமலைக்குச் சென்று திருநந்திதேவரிடம் உத்தரவுபெற்றுக்கொண்டு உட்சென்று சிவபெருமானைவணங்கி, "சுவாமீ, ஞானயோகம் போதிக்க வேண்டும்." என்று விண்ணப்பஞ் செய்தார்கள். சிவபெருமானும் "அங்ஙனமேயாகுக" என்று அருள்செய்து திருநந்திதேவரை நோக்கி, "நந்தியே, தேவர்கள் எவர்வரினும் உள்வரவிடாதிருத்தி; மன்மதன்வரின் விடுதி" என்று அருள்செய்து சனகர் முதலிய அந்தமுனிவர்கள் தமது திருவடிகளின் முன்னிருக்கத் தமது கரத்தைத் திருமார்பில்வைத்து அந்தக்கரத்திலுள்ள அங்குஷ்டத்தையும் தர்ச்சனியையும் ஒன்றுசேர்த்து மற்றையவிரல்களை விரித்துச் சின்முத்திரைகாட்டி ஞானயோகத்தில் அமர்ந்து அவர்களுக்கு அதனைப்போதித்தார். சிவபெருமான் இறைப்பொழுது ஞானயோகத்திருப்பினும் தேவர் மனிதர் முதலிய ஜன்மவருக்கத்துக்கெல்லாம் எண்ணில்லாத யுகங்கள்சென்றன. சர்வவியாபியாகிய சிவபெருமான் யோகத்திலிருப்பதினால் அவ்வான்மவருக்கமெல்லாம் இன்பநெறியற்று விருத்தியாகாதிருந்தன.

இப்படி நிகழுங்காலத்திலே, இந்திரன் சூரபன்மன் செய்த துயரினாலே சுவர்க்கலோகத்தை விட்டுநீங்கிப் பூலோகத்துக்கு

இந்திராணியோடுவந்து திருக்கைலாசமலையையடைந்து சிவபெருமானைத்தரிசிக்கத்தகுந்த காலம் வாய்ப்புறாததினால் மேருமலையையடைந்து அவரைநோக்கித் தவஞ்செய்தான். சிவபெருமான் அத்தவத்துக்கிரங்கி எழுந்தருளி, "அன்பனே, உனக்குவேண்டும் வரம்யாது?" என்று வினவியருள; அவன் அவரை வணக்கஞ் செய்து, "சுவாமீ, சூரபன்மனைவதைத்து எங்களுக்கருள்புரிய வேண்டும்" என்றான். சிவபெருமான் அதனைக்கேட்டுப் புன்முறுவல்செய்து, "இந்திரனே முன் தக்கன்செய்த வேள்வியிற்சேர்ந்த பாவம் இது; எமது குமாரனொருவன் சூரபன்மனையும் அவன் சேனைகளையும் வதைத்து அருள்செய்வான்" எனத்திருவருள் பாலித்து அந்தர்த்தானமாயினர். பின் இந்திரன் மனஞ்சந்துஷ்டியடைந்து ஐராவதியை வியாழபகவானுடைய மனைவியிடத்தில் கையடைகொடுத்து சத்தியலோகத்தையடைந்து பிரமதேவரை வணங்கிச் சூரபன்மன் செய்யும் துயரையும் சிவபெருமான் தனக்கு அருள் செய்ததையுஞ் சொன்னான். பிரமதேவர் அதனைக் கேட்டு அவனுடனும் தேவர்களுடனும் வைகுந்தலோகத்தையடைந்து விஷ்ணுமூர்த்திக்கு நிகழ்ந்தவற்றைச் சொன்னார். விஷ்ணுமூர்த்தி, அதனைக்கேட்டுப் பிரமதேவரது முகத்தை நோக்கி, "மைந்தனே, எம்பெருமான் யோகத்திருத்தல் நீங்கி உமாதேவியை விவாகஞ்செய்து ஒரு குமாரனைப்பெறும் பொருட்டு மன்மதனையனுப்புவாயாக" என்று சொல்லப்பிரமதேவர் இந்திராதிதேவர்களுடன் தமதுலகத்துக்குப் மீண்டு மன்மதனை அழைத்தார். அப்பொழுது மன்மதன்வந்து வணங்க; அவர் அவனை நோக்கி, "மன்மதனே, எம்பெருமான் யோகம் நீங்கி யுமாதேவியைத் திருமணம் புரிய உன்பஞ்சபாணங்களையும்செலுத்துக," என்றார். மன்மதன் அதனைக்கேட்டுச் "சிவ" "சிவ" என்று செவிபொத்தி, ஆதிமத்தியாந்தரகிதராகிய சிவபெருமானை எண்ணி அஞ்சி, அநேகவிதம் மறுத்துச்சொல்லப் பிரமதேவர் வெகுண்டு "மன்மதனே, மறுப்பையாயின் உன்னைச் சபிப்பேன்" என்றார். மன்மதன் அதனைக்கேட்டுப் பிரமதேவரது உலகத்தைவிட்டு

கிள்ளையாகிய குதிரைபூண்ட தேரில் இரதிதேவியுடன் ஆரோ கணித்து திருக்கைலாசமலையை நோக்கிச்சென்று அதனைக்கண்ட பொழுதே கரங்கள் சிரமேற்குவியவணங்கித் தனது பரிசனங்களை நிறுவிப் பஞ்சபாணங்களையும் தூண்டினான். அதனால் பக்ஷிசாலங் களும் விலங்கினங்களும் தத்தம் பெண்ணினங்களை மோகித்தன. இதனைக்கண்டு திருநந்திதேவர் "உம்" என்று வெகுண்டு உரப்பினார் அப்பொழுது மன்மதன் தூண்டிய பாணங்கள் ஆகாயத்தில் நின்றன. மன்மதன் இதனைக்கண்டு அஞ்சித்திருநந்திதேவரை யடைந்து வணங்கினான். திருநந்திதேவர் அப்பொழுது அவனை நோக்கி, "நீ வந்தகாரணம் யாது." என்று வினவினார். மன்மதன் நிகழ்ந்ததை அவருக்கு விண்ணப்பஞ்செய்ய; "மேலைவாயிலால் சிவாஞ்ஞைப் பிரகாரம் செல்லுதி" என்று அவர்விடைகொடுக்க; உட்சென்று, சிவசந்நிதானத்தையடைந்து, பரவசப்பட்டு, அயர்ந் துவீழ்ந்து இரதிதேற்றவெழுந்தான் அப்பொழுது அரிபிரமேந்திராதி தேவர்களும் சென்று மன்மதன் செய்யும் பெற்றியைக்காணுமாறு அம்மலையின் ஒருபுடை நின்றார்கள். மன்மதன் முழுமுதற்கடவு ளாகிய சிவபெருமான்மீது, தாமரை, அசோகு, மா, முல்லை, நீ லோற்பலம் என்னும் மலர்க்கணைகளைத் தூண்ட அவைசென்று சிவ பெருமானையடைய அவர்வெகுண்டு நெற்றியிலுள்ள அக்கினிக் கண்ணைச் சிறிதுதிறப்ப அதிலிருந்துண்டாகிய அக்கினிப் பொறியினால் அவன் சாம்பராயினான். இரதிதேவி அதனைக் கண்டு ஆகுலித்து அழுதாள். தேவர்கள் இவற்றையறிந்து சிவபெருமானைத் துதித்தார்கள்.

பின்பு, சிவபெருமான் யோகம் நீங்கித் திருநந்திதேவரைத் திருவுள்ளத்தெண்ண; அவர் வருதலும், "அரிபிரமேந்திராதிதே வர்களைத் தருதி" என்றருளிச்செய்தார். தேவர்கள் திருநந்தி தேவருடைய ஆஞ்ஞையினால் உட்சென்று, 'சிவபெருமானை வணங்கி, "உமாதேவியைத் திருமணஞ்செய்து ஒரு திருக்குமார ரைத் தருதல்வேண்டும்" என்றுவிண்ணப்பஞ்செய்தார்கள் சிவ பெருமான், "அங்ஙனமேயாருக" என்று திருவருள்பாலித்து இரதி யையழைத்து "நாம் திருமணஞ்செய்யும்பொழுது உனது கண

வனைத்தருகின்றோம்'' என்று திருவாய்மலர்ந்தருள; அவளும் இமயமலையினையடைந்தாள். சிவபெருமான் பின்பு சனகாதி இருடிகளை நோக்கி, "நீங்கள் இன்னும் நிட்டை கூடி வாழுங்கள்'' என்று விடைகொடுத்துச் செல்லவிட்டு; இமயமலைக்கெழுந்தருளி, உமாதேவியார் தவஞ்செய்யும் பன்னசாலையை நோக்கி உரைதடுமாற கால்கள்பின்ன நரைதிரையுற்ற முதுவேதியவடிவங் கொண்டு சென்றார். உமாதேவியார் இவரைக்கண்டு எழுந்து நமஸ்கரித்தார். பின்பு சிவபெருமான் அவரைநோக்கி, "நீ தவஞ் செய்யும் காரணம் யாது'' என்று வினவியருள; அவர் இவரை நோக்கிச் "சிவபெருமானைத் திருமணம் புரிதற்குத் தவம்புரிகின்றேன்'' என்றார். அதனைக்கேட்ட சிவபெருமான் அவரிடம் தம்மைப்பலவாறு நிந்தித்துக்கூறினார். உமாதேவியார் இவரைச் சிவபெருமானென்பதறியாமையால் இவரைநோக்கி, "முழுமுதற் கடவுளை நிந்திக்கும் வேதியனே உன் தன்மை இருந்தவாறென்னே; செல்லுதி, செல்லுதி'' என்றார். சிவபெருமான் அதனைக்கேட்டு, "நங்கையே, நாமே உன்னைமணஞ்செய்ய வந்தோம்'' என்றார். உமாதேவியார் இதனைக்கேட்டு பொறுக்கலாற்றாது ஒருபுடை நோக்கிச்சென்றார். சிவபெருமான் இதனைக்கண்டு புன்னகை புரிந்து தமது வடிவத்தை எடுத்து இடபாரூடராய்க் காட்சி கொடுத்தார். உமாதேவியார் அதனைக்கண்டு நாணமீதூர கரங் குவித்து வணங்கி, "நாயேன், தேவரீரையறியாமல் உரைத்த வெஞ்சொற்களைப் பொறுத்தருளவேண்டும்'' என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் அதனைக்கேட்டு, "நீ கூறியவைகள் எமது துதிகளாயின; நாளையதினம் மணஞ்செய்தற்பொருட்டு வருவோம்; தவஞ்செய்தலொழிதி.'' என்று அருளிச்செய்து அந்தர்த்தானமாயினர். பின்பு உமாதேவியார் இமயமலையரசனையடைந்து நிகழ்ந்தவற்றைச்சொல்லி அங்கேயிருந்தார்.

பின்பு, சிவபெருமான் திருக்கைலாசமலையில் எழுந்தருளியிருக்கும்பொழுது, சத்தமுனிவர்களை அழைப்பித்து அவர்களை நோக்கி, "நீங்கள் இமயமலையரசன்புத்திரியை எமக்கு மணம்

பேசக்கடவீர்கள்'' என்றார். முனிவர்கள் "இப்பணி எங்களுக்குக்கிடைத்ததே'' என்று ஆனந்தித்து இமயமலையை நோக்கிச் சென்றார்கள். இமயமலையரசன் இவர்கள் வருதலைக்கண்டு எதிர் சென்று அழைத்து ஆசனங்கொடுத்து வணங்கி, "எதனை விரும்பி எழுந்தருளினீர்கள்'' என்றான். சத்தமுனிவர்கள் அதனைக்கேட்டுச் சிவபெருமான் அருளிச்செய்ததைச் சொன்னார்கள். மலையரசனும் "இது நான் செய்த பேறே'' என்று இயைந்தான். பின்பு, சத்த முனிவர்களும் திருக்கைலாசமலையையடைந்து நிகழ்ந்தவற்றை விண்ணப்பஞ் செய்து தமது பதவியையடைந்தார்கள்.

பின்பு, இமயமலையரசன் தனது நகரத்தை அலங்கரித்து சிவபெருமானையடைந்து, "இன்று பங்குனி உத்திரநக்ஷத்திர மாகும். எனது புத்திரியைத் திருமணஞ்செய்யவெழுந்தருள வேண்டும்'' என்று பிரார்த்தித்தான். சிவபெருமான் அதனைக்கேட்டு, "நீசெல்லுதிவருவோம்'' என அருளிச்செய்து அவனை அனுப்பிவிட்டுத் திருநந்தி தேவரை நோக்கி, "நமது மணத்துச்சுருயாரையுந்தருதி'' என்றருள்புரிந்தார். திருநந்திதேவரும் அதனைக் கேட்டு யாரும் சேருமாறு உள்ளத்தெண்ணினார், எண்ணுதலும் இந்திரர்களும், அரிபிரமேந்திராதி தேவர்களும், முனிவர்களும். கணங்களும் திருக்கைலாசமலையையடைந்து சிவபெருமானைத் தோத்திரஞ்செய்து வணங்கினார்கள். அப்பொழுது பிரமதேவர் ஹாரகேயூரமகுட கங்கணமுதலியவாபரணங்களைச் சிவபெருமானுடைய சந்நிதானத்தில் வைத்தலும், அவர், "இவற்றை ஏற்றாம்,'' என்று தமது திருக்கரத்தை அவற்றின் மேல்வைத்தருளினார். பின்பு சிவபெருமான் திருமணக்கோலங்கொண்டு யாவரும் புடைசூழ இடபாரூடராய்த் திருக்கைலாசமலையைநீங்கி இமயமலையையடைந்து அம்மலையரசனது அரண்மனைவாயிலில் வந்தருளினார். அப்பொழுது மேனை யெதிர்சென்று பாலினால் அவருடைய திருவடிகளை விளக்கிச்சென்றாள். பின்பு, சிவபெருமான் திருமணமண்டபத்தையடைந்து அரிபிரமேந்திராதி தேவர்களும் முனிவர்களும் கணங்களும் வேதியர்களும் புடைசூழச் சிங்காசனத்தில் வீற்றிருந்தருளினார்.

அப்பொழுது தென்பால் உயர்ந்து வடபால் இழிந்தது தேவர்கள் இதனைக்கண்டு அஞ்சினார்கள். சிவபெருமான் அதனைக்கண்ணுற்று அகத்தியமுனிவரைப் பொதியமலையிற் செல்லுமாறு விடைகொடுத்தனுப்பினார். பின்பு, உமாதேவியார் திருமணக்கோலங்கொண்டு அரம்பையர்கள்சூழச் சிவபெருமான் வீற்றிருக்குமிடத்தையடைந்து அவரை வணங்க; அவர், "இருப்பாயாக" என்று அருள அவ்வாறு உமாதேவியாரும் சிவபெருமானது பாகத்தில் வீற்றிருந்தார். இமயமலையரசன் தன் மனைவி கரகநீர் வார்க்க சிவபெருமானது பாதகமலங்களைவிளக்கிப் பூசித்து, "எனது புத்திரியை அளித்தேன்; ஏற்றருளவேண்டும்." என்று சொல்லித் தனது புதல்வியின் கரத்தைச் சிவபெருமானது கரத்திற் கொடுத்தான். அப்பொழுது, தேவர்கள் புகழ்ந்தார்கள்; தும்புருநாரதர்கீதமிசைத்தார்கள்; கணங்கள் முழவறைந்தார்கள்; மடவார்கள் வாழ்த்தினார்கள்

இது நிகழ்ந்தபின், இமயமலையரசன் பழவர்க்கங்களையும் பாலையும் நிவேதித்து, "ஏற்றருளவேண்டும்" என்று விண்ணப்பம் செய்தான் அவற்றின்மீது சிவபெருமான் திருக்கரத்தாற் தொட்டு "இவற்றை ஏற்றும்." என்றருளிச்செய்தார். பிரமதேவர் விவாகக் கிரியைகள் யாவற்றையும் முடித்தார். பின்பு அரிபிரமேந்திராதி தேவர்களும் இமயமலையரசனும் சுற்றத்தவர்களும் சிவபெருமானையும் அக்கினியிற்சூடுபோல அவரைவிட்டுநீங்காத சத்தியாகிய உமாதேவியாரையும் பலகால்வணங்கிச் சேடத்தை உட்கொண்டார்கள். இரவிதேவி அப்பொழுது வந்து சிவபெருமானைவணங்கி, "எனது கணவனைத்தரவேண்டும்" என்றுவிண்ணப்பிக்க, அவரும் மன்மதன் தோன்றுமாறு திருவுள்ளத்தில் நினைந்தருளினார். மன்மதன் உயிர்பெற்றெழுதலும் சிவபெருமான்; அவனைநோக்கி, "நீ, உன்மனைவிக்குமாத்திரம் தோன்றுதி" என்று அருளிச்செய்ய அவனும் இரதியும் அவரைவணங்கிக்கொண்டு தமதிடத்தையடைந்தார்கள். சிவபெருமான் அரிபிரமேந்திராதி தேவர்களும் முனிவர்களும் கணங்களும் புடைசூழ இடபாரூடராய் உமாதேவிவாமபாகத்தில் மேவத்திருக்கைலாசமலையை யடைந்து யாவர்க்கும்

யதாஸ்தானத்தையடையுமாறு அருள்புரிந்து உமாதேவியோடு வீற்றிருந்தார். அப்பொழுது ஆன்மவருக்கங்களெல்லாம் விருத்தியடைந்தன.

ஒருநாள் அரிபிரமேந்திராதி தேவர்கள், "எமதிறைவன் உமாதேவியை மணம்புரிந்தும், சூரபன்மனுடையவலிகெடுமாறு ஒரு திருக்குமாரரை இன்னும் தரவில்லையே" என்று கவன்று வாயுதேவனைச் சிவபெருமானுடைய அற்றம் அறிந்துவருமாறு அனுப்ப; அவன் சென்று திருநந்திதேவரைக்கண்டஞ்சினான்; பின், அவர்கள் திருக்கைலாசமலையையடைந்து திருநந்திதேவரிடம் உத்தரவுபெற்றுக்கொண்டு உட்சென்று, சிவபெருமானைத்தொழுது வணங்கி, "சுவாமீ, அடியேம் சூரபன்மனால் மிகவும் வருந்துகின்றோம்; தேவரீரைப்போல் ஒரு திருக்குமாரரைத்தரவேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்யச் சிவபெருமான், ஈசானம், தற்புருடம், அகோரம், சத்தியோசாதம், வாமதேவம், அதோமுகம் என்னும் ஆறு திருமுகங்களுடனும் அவைஒவ்வொன்றினும், சூரியன் சந்திரன் அக்கினி என்னும் முச்சுடர்களாகிய மூன்று திருக்கண்களுடனும் காட்சிகொடுத்தருளி ஆறு அக்கினிக்கண்களினின்றும் ஆறு அக்கினிப்பொறிகளைத் தோற்றினார். அவை எவ்விடத்தும் பரந்து செல்ல உமாதேவியார் அஞ்சித்தமது உறையுளை ஒடியடைந்தார், தேவர்கள் அஞ்சி இரிந்தார்கள். பின் அவர்கள் ஒருங்குதிரண்டு வந்து சிவபெருமானைத் தோத்திரஞ்செய்து வணங்கி, "எங்கள் இன்னல்கெட ஒரு திருக்குமாரரை யளிக்கவேண்டுமென்று நாங்கள் விண்ணப்பஞ்செய்யவெம்மைகொண்டஅக்கினியை அளித்தீர்; எங்ஙனம் உய்வேம்" என்று விண்ணப்பஞ்செய்ய; சிவபெருமான் திரும்ப ஒருதிருமுகங்கொண்டு அவற்றைத் திருமுன்வருமாறு திருவுள்ளங்கொள்ள; அவைவந்தன. சிவபெருமான் வாயுதேவனுக்குச் சத்தியினையளித்து, "இப்பொறிகளைத் தாங்கிச்சென்று கங்கையில் இடுதி." என்று கட்டளையிட; அவனும் அங்ஙனமே செய்தான். கங்கை அவற்றைத் தாங்கலாற்றாது சரவணப்பொய்கையிலிட்டாள். அங்கே சுப்பிரமணியக்கடவுள் ஆறுதிருமுகமும்

பன்னிரு திருக்கைகளும் கொண்டு எண்ணில்கோடி யான்மாக்களுய்யுமாறு தோன்றியருளினார்.

சுப்பிரமணியக்கடவுளை வளர்க்கும்படி திருமால்முதலிய தேவர்கள் அறுமீனை வேண்ட, அவர்கள் சென்று சரவணதடாகத்தில் ஆறு குமாரர்கள் வடிவுகொண்டு எழுந்தருளியிருந்த சுப்பிரமணியக்கடவுளுக்குத் தங்கள் முலைப்பாலை அருந்திவளர்த்தார்கள்.

முன், உமாதேவியார் அஞ்சியோட அவரது சிலம்பு உடைந்துவிழ அதில்இருந்தநவமணிகளில் உமாதேவியாரது சாயல் தோன்ற; அவை ஒன்பது மங்கையர்களாகி வந்து சிவபெருமானை விருப்போடுநோக்கிக் கருவுற்றார்கள். உமாதேவியார் சினந்து "நீங்கள் கருப்பவயவாதிருக்கக்கடவீர்கள்" என்று சபித்தார். ஒன்பது மங்கையர்களும் அதனைக்கேட்டு அஞ்சிவெயர்த்தார்கள். அவ்வெயர்விலிருந்து ஒரிலக்கம் வீரர்கள் உற்பவித்தனர். பின் உமாதேவியாருடைய அருளினாலே அம்மங்கையர்கள் ஒன்பது புத்திரரையீன்றார்கள். அவர்கள் வீரவாகு, வீரகேசரி, வீரமகேந்திரன், வீரமகேசன், வீரபுரந்தரன், வீரவரக்கன், வீரதிவாகரன், வீராந்தகன், வீரதீரன் என்று பெயர்பெற்று நவவீரர்களாய் விளங்கினார்கள். சிவபெருமான் இவர்களை உமாதேவியாருக்குக் காட்டி, "இவர்கள் எங்கள் புதல்வர்கள்" என்று அருளிச்செய்து "நீவிர், ஒரிலக்கம் வீரரோடும் எமதுகுமாரனுக்கு ஏவல்புரியக் கடவீர்கள்" என்று திருவருள் பாலித்து அரிபிரமேந்திராதி தேவர்கள் புடைசூழ இமயமலையின் ஒருபுடையிருக்கும் சரவணதடாகத்தையடைந்து, "உன் புதல்வனை எடுத்து வருதி" என்று உமாதேவியாருக்கு அருளிச்செய்தார் அவர்சென்று ஆறுதிருக்குமாரர்களையும் பேரன்புடன் ஒருங்குதழுவினார் அப்பொழுது சுப்பிரமணியக் கடவுள் ஆறுதிருமுகங்களும் பன்னிரு திருக்கரங்களுமுடைய ஓர் வடிவத்தைக்கொண்டு சண்முகமூர்த்தியாக விளங்கினார். உமாதேவியார் அவருக்குத் தமது திருமுலைப்பாலை ஊட்டிச் சிவபெருமானைப் பணிவித்தார். சிவபெருமான் அவரையெடுத்துத் திருமார்பிலணைத்து, கார்த்திகைப்பெண்களுக்கருள் புரிந்தார். உமா

தேவியார் திருக்குமாரருக்குத் தமது திருமுலைப்பாலை ஊட்டிய பொழுது சிந்தியபாலை பராசரமுனிவரது சாபத்தினாலே மற்சமாய் அச்சரவண தடாகத்திலிருந்த அவரது ஆறு புதல்வர்களும் உண்டு சாபவிமோசனமுற்றுச் சிவபெருமானையும் உமாதேவியை யும் வணங்க; அவர்களைச் சிவபெருமான் நோக்கி, "பரங்குன்றிற் சென்று தவஞ்செய்யக்கடவீர்". நமது குமாரன் அருள்புரிவான்; என்றருளிச் செய்ய; அவர்களுமவ்வாறேசென்றனர்.

சிவபெருமான் தமக்கும் உமாதேவியாருக்குமிடையில் சுப் பிரமணியக்கடவுள் வீற்றிருக்கவும் அரிபிரமேந்திராதி தேவர்கள் புடைசூழவும் கார்த்திகைப்பெண்களுக்கருள் புரிந்துதிருக்கைலா சமலையையடைந்து வீற்றிருந்தார்.

சுப்பிரமணியக்கடவுள் நவவீரருடனும் இலக்கவீரர்களுட னும் திருவிளையாடல் தொடங்கினர். பூலோகத்திலுலாவுவர்; சுவர்க்கலோகத்திலுலாவுவர்; சத்தியலோகத்திலுலாவுவர்; வைகுந்த லோகத்திலுலாவுவர்; சிவலோகத்திலுலாவுவர்; அண்டங்களிலுலா வுவர்; கடல்களை ஒன்றுபடுத்துவர்; சக்கரவாளகிரியைநிலத்திலழுத் துவர்; திக்குநாகங்களை மலைகளிற் பிணித்திழுப்பர்; அரிபிரமேந் திரர்களுடைய பதங்களை முன்னியல்பன்றி ஒருவர்பதத்திலொரு வரையுய்ப்பர்; அஷ்டபாலகர்களுடைய பதங்களைப்பிடுங்கிப் பிறழ வைப்பர்; பெருமான் திருவிளையாடல் என்புன்மொழியினாற் சொல்லப்போமோ.

இந்திராதி தேவர்கள், ஒருதிருமுகத்தோடு சுப்பிரமணியக் கடவுள் நிற்ப, "இவனே இவற்றைச்செய்கின்றான்" என்று எண்ணி அவரோடு பொருதார்கள் இந்திரன் தனது படை களை செலுத்தினான். அவைகள் சுப்பிரமணியக்கடவுளையருச் சித்தநறுமலர்கள் போன்றன. சுப்பிரமணியக்கடவுள் ஒருவில் லைச்சிருஷ்டித்துக் கணைகள் பூட்டி ஐராவதயானையை வதைத்து இந் திரன்மீது ஏழுபாணங்களைத் தூண்டி அவனை மூர்ச்சிக்கச் செய்து நான்கம்புகளால் வருணனையும் யமனையும் வென்று இரண்டு ஆயபு

திரியாகிய * விபுதை என்பவளையும், தாரகாசுரனுக்கு நிருதியின் புத்திரியாகிய சவுரி என்பவளையும் விவாகஞ்செய்து கொடுத்தான். சூரபன்மனுக்குப் பதுமகோமளையின் வயிற்றில் ஒருபுத்திரன் பிறந்தான். அவன் தொட்டிலிற்கிடக்கும்பொழுது சூரியனுடைய கிரணம் சுட, அவன் அந்தரத்திற்பாய்ந்து சூரியனைக்கொண்டுவந்து தொட்டிலிற் பிணித்தான். அதனால் அவனுக்குப் பானுகோபன் என்னும் பெயருண்டாயிற்று. பின்பு, அவன்பிரமதேவர்வந்திரப்பச் சூரியனைச் சிறைவிட்டான். அவன் வளர்ந்து ஒருமுறை திருமாலையும் யுத்தத்தில்வென்றான். பின்னும் சூரபன்மனுக்குப் பதுமகோமளையின் வயிற்றில் அக்கினிமுகன், இரணியன், வச்சிரவாகு என்னும் புதல்வர்கள் பிறந்தார்கள். மற்றைய மனைவியரின்வயிற்றில் மூவாயிரம் புதல்வர்கள் பிறந்தார்கள். சிங்கமுகாசுரனுக்கு அதிசூரனும் நூறு புதல்வர்களும்; தாரகாசுரனுக்கு அசுரேந்திரனும் பிறந்தார்கள். அசமுகி என்பவள் துருவாசமுனிவரை வலிதிற்புணர்ந்து வில்வலன் ‡ வாதாவி என்பவர்களைப்பெற்றாள். அவர்கள் பிரமதேவரைநோக்கித் தவம்புரிந்து, வரம்பெற்று; அதனால் முன்னவன் முனிவனாகியும் பின்னவன் ஆடாகியும் உருக்கொண்டு அவ்வாட்டை முன்னவன் சமைத்தூட்ட உண்டவர்களுடைய குடரைக் கிழித்து இளையவன் வருவான். இது நிற்க.

சூரபன்மன் ஐராணியைச்சேர விரும்பி ஒருசேனாபதியிடம் சேனைகளைக்கொடுத்து ஒன்பதுகோடி அசுரப்பெண்களையுங்கூவி, "நீவிர் சென்று இந்திரனைச் சிறையிட்டு அயிராணியைக்கொண்டு வருதிர்" என்று பணித்தான். சேனைத்தலைவன் போர்க்கெழுந்து செல்லும்பொழுது இந்திரன் இதனையறிந்து அயிராணியுடன்

* கந்தபுராணமுதற் பதிப்பில் "அங்கியின் மகள்" எனவும் பிறபதிப்புகளில் "அந்தகன் மகள்" எனவும் இருக்கின்றது.

அங்கி-அக்கினி. அந்தகன்-யமன்.

‡ இந்த வில்வலனென்னும் பெயர் வடமொழியில் [illegible] இல்வலனென்று காணப்படுகின்றது.

ஒளித்துப் பூலோகத்திலே சீர்காழிக்குவந்து அஞ்சி மூங்கிலாகிச் சிவபெருமானை அருச்சித்தான். அசுரர் சூரபன்மனுக்கு நிகழ்ந்ததைக்கூறினார்கள். இந்திரன் அருச்சனைக்கு உண்டாக்கிய நந்தனவனம் நீரின்றி வாடியது. அக்காலத்தில் நாரதமுனிவர் விந்தமலையையடைந்து மேருமலை தனது உயர்வினாலே தருக்குற்று நிற்கின்றது என்று புகல அது சத்தியலோகம் வரையுமுயர்ந்து தருக்கியது தேவர்கள் துன்புற்று, அகத்திய முனிவருக்கு நிகழ்ந்ததை விண்ணப்பித்து, விந்தகிரியையடக்குமாறு வேண்டிக்கொண்டார்கள். அகத்தியமுனிவர் சிவபெருமானை நோக்கித்தவஞ்செய்ய அவர் எழுந்தருளி, "நீ, விந்தமலையையடக்கிப் பொதியமலையில் இருத்தி" என்றருளிச்செய்து, காவிரிநதியை ஒரு குண்டிகையிற் கொடுத்து மறைந்தருளினார்.

அகத்தியமுனிவர், தென்றிசையை நோக்கிச் செல்லும் பொழுது தாரகாசுரன் இருக்கும் மாயாநகரியையணைந்தார். கிரவுஞ்சன் என்னும் அசுரன் அவரைக்கண்டு மலைவடிவங்கொண்டு செல்லவொட்டாது வழிமயக்கினான். அகத்தியமுனிவர் அதனைக் கண்டு கையாற் குத்தி, "நீ இந்தமலைவடிவத்துடனிருந்து சுப்பிரமணியக் கடவுளது வேற்படையால் அழிதி" என்று சபித்து, அதனை விட்டுநீங்கி, விந்தமலை இருக்குமிடத்தையடைந்து, அதனையடக்கிச்சென்றனர். அப்பொழுது வில்வலன் வாதாவியை ஆடாக்கி, அட்டு, முனிவேடங்கொண்டு அகத்தியமுனிவரிடத்திற்சென்று, "அமுது செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்து அன்னத்தையும் ஆட்டுக்கறியையும் படைத்து மறைவிற்சென்று "வாதாவி வருதி" என்ன; வாதாவி, வயிற்றிலுயிர்பெற்று இரைதலும்; அகத்தியமுனிவர், வயிற்றைத்தடவி 'வாதாவி சீரணித்து விட்டான்" என்று திருவாய்மலர; அவன் ஆவியிழந்து அழிந்தான். வில்வலன் இதனைக்கண்டு, வெகுண்டு, தண்டத்தை அகத்தியமுனிவர்மேல் எறிந்தான். அவர் ஒரு தருப்பையை எடுத்து சிவன் படையாகப் பூசித்துவிடுதலும் அதுசென்று வில்வலனை மாய்த்தது. அகத்தியமுனிவர் அவ்விடத்தை விட்டு நீங்கிக் கொங்க

தேசத்துக்கணித்தாகச் செல்லும்பொழுது வில்வலன் வாதாவியைக்கொன்ற பிரமகத்தி வருத்தியது. ஆதலால், அவர் அங்கே சிவார்ச்சனைபுரிந்தார். நாரதமுனிவர் இந்திரனிடத்திற்சென்று, "உனது நந்தனவனம் வாடுகின்றது; அகத்தியமுனிவர் குண்டிகையில் காவிரிநதிகொண்டுவருகின்றார்; அதனைப்பெறுதி" என்றார். இந்திரன் விநாயகக்கடவுளைப் பூசித்துக் "காவிரிநதியைத் தருதி" என்றான். விநாயகக்கடவுள் காகவடிவுகொண்டு அகத்தியமுனிவரது குண்டிகையில் இருந்தார். அகத்தியமுனிவர் அதனைக்கண்டு கையெடுத்து ஓச்சினார். விநாயகக்கடவுள் அக்குண்டிகையைக்கால்களால் கவிழ்த்துவிட்டுப் பறந்து சென்றார். அகத்தியமுனிவர், அதனைக்கண்டு உருத்தலும் விநாயகக்கடவுள் பிராமணச் சிறுவன் போல் வேடங்கொண்டு; அகத்திய முனிவர் சமீபத்தில்வரின் தூரத்துச்சென்றும் தூரநிற்பின் கிட்டநின்றும் திருவிளையாடல் புரிந்தார். அகத்திய முனிவர் குட்டும்பொருட்டு அவரைக்கிட்டுதற்கு ஆற்றலின்றிவருந்த விநாயகக்கடவுள் தமதுவடிவத்தைக் காட்டிப் பலவரங்களையும் கொடுத்தருளினார்.

பின்பு, அகத்திய முனிவர், விஷ்ணுதலமாகிய திருக்குற்றாலத்தையடைந்து அங்குள்ள திருமால் விக்கிரகத்தைச் சிவலிங்கமாக்கிவணங்கினர். விநாயகக்கடவுள் கவிழ்த்த குண்டிகையிலிருந்து காவிரிநதிபெருகி இந்திரன் வைத்த நந்தனவனத்தைச் செழிக்கச்செய்தது அவன் மலர்களைப்பறித்துச் சிவார்ச்சனைபுரிந்தான். தேவர்கள் சிலர்வந்து அவனிடத்தில், சூரபன்மன் செய்யும் துயரத்தைக் கூறினார்கள். இந்திரன் அயிராணியை மகாசாத்தாவிடத்திற் காவலாகவைத்துச் சிவபெருமானைத் தெரிசிக்கும்பொருட்டுத் திருக்கைலாசமலைக்குச்சென்றான். சூரபன்மனுடைய தங்கையாகிய அசமுகி அப்பொழுது சீர்காழியில் வந்து சோலையில் அயிராணியைக்கண்டு சூரபன்மனிடம் கொண்டு செல்லுதற்கு ஈர்த்தாள். அயிராணி மனங்கவன்று அழுதாள். அப்பொழுது மகாசாத்தாவின் பரிசனராகிய வீரமாகாளர் அவ்விடம்வந்து அசமுகியை, "நிற்குதி" என்றுசொல்லி அவளுடைய மயிரைப் பற்றி, கரத்தைத் துண்டுபடுத்தி, அயிராணியை மீட்டு, அசமுகியை

மண்ணில் வீழ்த்தி உதைத்தார். அசமுகி மனங்கவன்று, மகேந்திரபுரத்தையடைந்து சூரபன்மனுக்கு இதனைக்கூறினாள். நாரத முனிவர் இவற்றையெல்லாம் திருக்கைலாசத்திற் சென்று இந்திரனுக்குக் கூறினார். அவன் சீர்காழிக்குவந்து வீரமாகாளரைப் புகழ்ந்து மேருமலைக்குச்சென்றான். சூரபன்மன் அசமுகியின் கையைப்பிரமதேவரைக்கொண்டு படைத்துத் தேவர்களைச் சிறையிட்டுப்பானுகோபனைப் போருக்குத் தூண்டினான்.

பானுகோபன், அசமுகியின் கரத்தைத் துணித்தவரைச் சீர்காழியிற் தேடிக்காணாது சுவர்க்கலோகத்துக்குச்சென்று சயந்தனோடுபொருது அவன் மூர்ச்சையுற்று ஐராவதத்தின்மீது வீழ; ஐராவதம், தனது நான்குகொம்புகளாலும் பானுகோபனைக்குத்திக் கொம்புகள் ஒடிந்து நிலத்தில் வீழ்ந்தது. பானுகோபன் சயந்தனையும் தேவர்களையும்பிணித்து, சுவர்க்கலோகத்தை எரித்து மகேந்திர புரத்திற்சென்று சூரபன்மனது முன்னிலையில் சயந்தன் முதலிய தேவர்களை நிறுத்தினான் அவன் அவர்களைவருத்திச் சிறையிலிட்டான். ஐராவதயானை திருவெண்காட்டிலே சிவபெருமானைப் பூசித்து முறிந்த நான்கு கொம்புகளும் வரப்பெற்றது. இவற்றையறிந்து இந்திரன் தவஞ்செய்தது தொடக்கம் சுப்பிரமணியக்கடவுள் திருவவதாரம் செய்ததுவரையும் வியாழபகவான் அவரது சந்நிதானத்தில் சொல்லி வணங்கினார்.

அசுரகாண்டம் முற்றிற்று

திருச்சிற்றம்பலம்.

# உ. மகேந்திரகாண்டம்.

சுப்பிரமணியக்கடவுள், இவற்றை அறியாதவர்போற்கேட்டருளி, வீரவாகுதேவரைநோக்கி, "நீ சென்று சூரபன்மனிடம் சயந்தன் முதலிய தேவர்களைச்சிறைவிடச்சொல்லுதி; அவன்மறுப்பின் நாளைச்சென்று சூரபன்மனைவதைத்துத் தேவர்களைச்சிறை மீட்போம்" என்றருளிச்செய்தார் வீரவாகுதேவர், அதனைக்கேட்டு அவரைவணங்கிக்கொண்டு சென்று, சமுத்திரக்கரையையடைந்து, கந்தமாதனகிரியின் குவட்டிற்சேர்ந்து, பெருவடிவுகொண்டு சூரபன்மனது நகரத்தைக்கண்டார்; அக்கந்தமாதனகிரிநிலத்திலழுந்தியது பின்பு அவர்முன்வடிவுகொண்டுகந்தமாதனகிரி உயருமாறருள்செய்து ஆகாயமார்க்கமாகச்சென்று, மகேந்திரபுரியின்வடதிசையில் வீரசிங்கனைவதைத்து, இலங்கைநகரிற் பாய்ந்தருளினர். அங்கே இருந்த அதிவீரன் வந்தெதிர்க்க அவனைவதைத்தபின் வீரவாகுதேவர் மகேந்திரபுரத்தின் வடக்குவாயிலையடைந்து, அதிகோரன், என்பவனை வதைத்து மற்றையவாயில்களிற் காவல்புரிந்த அசுரர்களைவென்று, அணுவுருக்கொண்டு கீழ்த்திசைக்கோபுரத்திலிருந்து, மகேந்திரபுரத்தின் வளத்தைக்கண்டு, சூரபன்மனுடைய மந்திரியாகிய தருமகோபனது அரண்மனைச்சிகரத்திலிருந்தார். இது நிற்க.

சுப்பிரமணியக்கடவுள் சயந்தனுக்குக் கனவிலேதோன்றி, "நாம் தாரகனைவதைத்தோம்; உங்கள் சிறைநீக்கும்பொருட்டு வீரவாகுதேவனைச் சூரபன்மனிடம்தூதனுப்பினோம்; நாளை அவனை வதைத்து உங்களை மீட்போம்" என்றருளிச்செய்து மறைந்தார். வீரவாகுதேவர், சயந்தன் சிறையிருக்குமிடத்தையடைந்து, அவனைத்தேற்றி, சூரபன்மனுடைய அரசிருக்கை மண்டபத்தையடைந்து, தமது முன்வடிவத்தைக்கொண்டு, அசுரர்கள் சூழ்ந்து பணிசெய்யச் சிங்காசனத்தின்மீது அவன் வீற்றிருப்பதைக்கண்டு சுப்பிரமணியக்கடவுளின் திருவருளால் ஒரு சிங்காசனம் வந்து சூரபன்மனுடைய முன்னிலையிலிருக்க அதன்மீதேறி இருந்தார். சூரபன்மன், இதனைக்கண்டு "இவன் வித்தையில் வல்லவன்" என்று

வெருண்டு, அவரைநோக்கி, "நீ யார்? வந்தகாரணம்யாது?" என்றான். வீரவாகுதேவர் அதனைக்கேட்டுச் சூரபன்மனைப் பார்த்து, "சிவபெருமானுடைய திருக்குமாரராகிய சுப்பிரமணியக்கடவுள் தேவர்களைச் சிறைநீக்கத்திருவுள்ளங்கொண்டனர்; நீ அவர்களைச் சிறைவிடுதி; இன்றேல் நாளை உயிர் துறப்பை; நான் சுப்பிரமணியக்கடவுளின் தூதுவன்" என்றனர். சூரபன்மன் இதனைக்கேட்டு, "நீ சொல்லியது நன்று; நன்று; பல்முளையாத சிறுவனோ என்னைவெல்லுவன்; பேதையே, செல்லுதி செல்லுதி" என்றான். வீரவாகுதேவர் பின்னும் அவனைநோக்கி, "சுப்பிரமணியக் கடவுள் பாலரல்லர், அவர் ஆதியுமந்தமுமில்லாத சிவபெருமானேயாவர்" என்றார். சூரபன்மன், அதுகேட்டு நகைத்து, புடையில் நின்ற ஆயிரவரைநோக்கி "இத்தூதுவனைக்கொல்லாது சிறைபிடுதிர்" என்றான். அவர்கள் வீரவாகுதேவரைப்பற்றுதற்கு நெருங்க; அவர், அவர்களைமண்மீது அடித்துவதைத்து சூரபன்மனைநோக்கி, "நீசுப்பிரமணியக்கடவுளின் வேற்படைக்கிரையாதல் திண்ணம்" என்று சொல்லி அகன்றனர். வீரவாகுதேவர் வீற்றிருந்த சிங்காதனம் ஆகாயத்திலெழுந்து மறைந்தது. பின்பு, அவ்வீரவாகுதேவர் சூரபன்மனுடைய கிளைஞர்களாகிய சதமுகன், சகத்திரவாகுகள், வச்சிரவாகு என்பவர்கள் வந்தெதிர்ப்ப, அவர்களை வதைத்து; இலங்கையில்வந்து, யாளிமுகன் வந்தெதிர்ப்ப அவனைவதைத்து; திருச்செந்தூரையடைந்து சுப்பிரமணியக்கடவுள் வீற்றிருக்கும் திருக்கோயிலையடைந்து அவரைவணங்கி நிகழ்ந்தவற்றைக்கூறினர்.

முன்பு, சூரபன்மன் அனுப்பிய ஒற்றர்கள், திருச்செந்தூரில் சுப்பிரமணியக்கடவுள் இருப்பதையும், அவருடைய சேனைத் தொகையையும், மற்றையவற்றையும் அறிந்துசென்று சூரபன்மனுக்குச்சொன்னார்கள். சூரபன்மன், தமரைக்கூவி நிகழ்ந்தவற்றையுரைத்து, "நாளைச்சிவகுமாரர்பொருதற்குவருவார்" என்று கூறினன். அப்பொழுது பலரும் பலவாறுரைப்பச் சிங்கமுகாசுரன் அவனைநோக்கி, "முன்பு, சிவபெருமான் நூற்றெட்டுகம் வாழுதிர் என்றருளிச்செய்தனர். அந்தயுகங்களும் தொலைந்தன

நமதுசத்தியே உங்களைவெல்லுமென்றார். அந்தச்சத்தியாகியவேற் படையால், தாரகன் இறந்தான். ஆகலால் தேவர்களைச்சிறைவிடுக் குதி" என்றான். சூரபன்மன், அதனைக்கேட்டு, "எம்பியே, நீ இளமையால் யுத்தம் புரிதற்கு அஞ்சினை; சிவபெருமான், தமது சத்திவெல்லும் என்றதும்கேட்டிலேன், சத்தியும் சிவனும் அபின் னமேயாதலின் சத்தி நம்மைவெல்லுமோ?" என்றுகூற; சிங்கமுகன் இனி அழியும்காலம் கிட்டியது என்று உன்னி; அவனை நோக்கி, அண்ணலே, சிறியேன்கூறியவற்றைப் பொறுத்தி; நானே சென்று பொருது மீள்வேன்" என்றான். சூரபன்மன், அது கேட்டு மகிழ்ந்து "நன்று, நன்று," என்றுசொல்லி அவனை யெடுத்து மார்புறப்புல்லி, "நீ உன் நகரிற்சென்றுவைகுதி" என்று விடுத்து, மற்றைய தமருக்கும் விடைகொடுத்துத் தன்னரண் மனை சேர்ந்தான்.

மகேந்திரகாண்டம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

# ௪. யுத்தகாண்டம்.

## முதனாட்பானுகோபன்யுத்தம்.

சுப்பிரமணியக்கடவுள், அடுத்தநாள், தேரிலேறித் தேவர்கள் புடைசூழ அந்நகரைவிட்டுநீங்கிக் கடல்கடந்து, மகேந்திரபுரத் தின் வடதிசையில் தேவகம்மியன் "ஏமகூடம்" என்னும் நகரி னைச்செய்ய அதிலெழுந்தருளியிருந்தார். நாரதமுனிவர் இதனைச் சூரபன்மனுக்குரைக்க; அவன், வருணனைக்கூவி, "சீ, என்பகை வரை இங்குவரவிட்டகாரணம்யாது?" என்று வினவினான். வரு ணன், அஞ்சி, "அண்ணலே, சுப்பிரமணியக்கடவுளும் தேவர் களும் ஆகாயவழியால்வந்தனர்; அவர்கள் என்மீதுவரக் கலங்

கினேன். தடுப்பதெவ்வாறு?" என்றுகூறினான். அப்பொழுது ஒற்றர்கள் சிலர் வந்து சூரபன்மனை வணங்கி, "சுப்பிரமணியக்கடவுள் யுத்தசந்நத்தராய்வந்தனர்," என்று கூற, அவன், பானுகோபனைக்கூவி, "நீ, சென்றுபொருது வெற்றியுடன் மீளுதி" என்றான். பானுகோபன், "அங்ஙனமாகுக" என்றுசொல்லி, படைக்கலங்களைத் தாங்கிக்கொண்டு, இருபதினாயிரம் வெள்ளம் சேனைகள் புடைசூழத்தேரிலேறி விசயன் முதலிய சேனாதிபதிகளுடன் யுத்தகளத்தையடைந்தான்.

நாரதமுனிவர், இதனைச் சுப்பிரமணியக்கடவுளுக்குணர்த்தலும் வீரவாகுதேவரை அவர் அனுப்பியருளினர். வீரவாகுதேவர் தேரிலேறித் தேவர்கள்புடைசூழ்ந்துவரப் பூதசேனைகளுடன் சென்று மகேந்திரபுரத்தின் மதிற்புறத்திற் பானுகோபனைக் கண்டனர். இருதிறச்சேனைகளும் ஒன்றோடொன்று நெருங்கிப் பொருதன. பூதசேனாதிபதிகளில் சிங்கன் என்பவன் அனலி என்னும் அசுரசேனாதிபதியின் மேற் சரமாரிபொழிந்து குதிரையைவீட்டி; அவனுடைய தேரிலேறியவன் மார்பிலடித்துப் பூமியில் வீசினான். சண்டன் இதனைக்கண்டு சிங்கனுடன்பொருதான். அவர்கள் ஒருவரை ஒருவர் கதையினால்மோதி இருவரும் தளர்ந்தனர். அவுணப்படைகளில் மாயன் என்பவனை நீலன்என்னும் பூதப்படைத்தலைவன் மோதிக்கறித்தான். சிங்கன் எழுந்து சண்டனைக்கரத்தால் மோதிவதைத்தான் அவுணரில், அசமுகன் என்பவன், மது என்பவனுடன் மற்போர்புரிந்து இளைத்து மாயையால் மறைந்து சக்கரப்படையைச்செலுத்தினான். அது, எதிர்ப்படையின்மையால் வெகுண்டு அசமுகனையேவதைத்து விஷ்ணுமூர்த்தியையடைந்தது. பானுகோபன் இதனைக்கண்டு உருத்துச்சரமாரி பொழிந்து, அனேக பூதர்களை வதைத்தான். உக்கிரன், அதனைக்கண்டு நகைத்துப் பானுகோபன் ஏறியதேரை அந்தரத்தெறிந்தான். பானுகோபன், சூரியலோகம் வரையும் தேரினோடுசென்று மண்ணில் விழுந்து உக்கிரனைக்கரத்தால்மோதி அந்தரத்தெறிய அவன் எழுலகமுஞ்

குதேவரது தேரைக் கரத்தாற்புடைத்தது. வீரவாகுதேவர் அதனைக்கண்டு அதன் கவுளில்மோதிக் கரத்தைப்பற்றி அந்தரத்தில் வீசினார். தருமகோபன் அதுகண்டு தண்டத்தை ஏவினான். வீரவாகுதேவர் அதனை வாளினாற்சிதைக்க அவன் வச்சிரத்தைச் செலுத்தினான், அதுவருகலும் அதனைப்பிடித்து அவன் மீதிலேயே செலுத்த அவன் பதைபதைத்துயிர் விட்டான். இதனைப் புண்டரீகம் என்னும் யானைகண்டு வீரவாகுதேவரைப் புகழ்ந்தேத்தி விடைபெற்றுக்கொண்டு தனது திக்கையடைந்தது. இதனை ஒற்றர்கள் சூரபன்மனுக்குரைக்க அவன் அறிவிழந்து துன்பக்கடலுளாழ்ந்தான்.

---

## பானுகோபன் வதை

அடுத்தநாள், ஒற்றர் சிலர்சென்று, பானுகோபனிடம் அவன் வீரவாகுதேவர் முதலிய வீரர்களை மாயையாற்கட்டிச் சுத்தோதக சமுத்திரத்திலிட்ட பின் நடந்தவரலாற்றை யுரைக்க அவன் "எங்கள் வாழ்வு அழிந்தது" என்று இரங்கி எழுந்து தந்தையின் அரண்மனையை யடைந்து அவனைவணங்கி, "நாங்கள் சிவகுமாரனாலும் அவன் படைகளாலும் இறத்தல் திண்ணம்; ஆதலால் தேவர்களைச் சிறைவிடுத்தி" என்றனன். சூரபன்மன் அது கேட்டு, "மைந்தனே, நீ மனத்தில் அஞ்சினை; உன் அரண்மனை அடைந்து வைகுதி; யான் போர்செய்து மீள்வேன்" என்றனன். பானுகோபன் அதுகேட்டு இனிமேற் செய்வதென்னையென்று கவன்று, "வஞ்சனேன்பிழைபொறுத்தி" என்றுரைத்து அவனிடம் விடைபெற்றுக்கொண்டு தேர்மேலேறி எண்ணில்லாச் சேனைகள் சூழ. யுத்தகளத்தை யடைந்தான். அந்தச்சமயத்தில் அவுணவீரரும் பூதவீரரும் எதிர்த்து யுத்தம் புரிந்தார்கள் வீரவாகுதேவரும் பானுகோபனும் யுத்தம்புரிந்தனர், அவர்களுள் வீரவாகுதேவர் வேற்படையைச் செலுத்தி பானுகோபனது நெற்றியைத்துளைத்து அவன் தேரினோடு அந்தரத்திலொளிக்க, "நில்லு நில்லு" என்று சீறித்தமது தேரினோடு அந்தரத்திலெழுந்து சரமாரிதூவ அவ

னது தேரையழித்தனர். பின்இருவரும் வாள்புரிந்தாயுத்தம்புரிந்து வீரவாகுதேவர் அவனது வலத்தோளைவெட்டி அவன் இடதுகரத் தால் வாள்பிடித்து யுத்தம்புரிய அவனது இடதுகரத்தையும் வெட்டிச் சிரசையும் கொய்தார். அப்பொழுது இந்திரன் முதலிய தேவர்கள் ஆரவாரித்துப் போற்றினர்.

பின்பு, வீரவாகுதேவர், தமது சபதம் முற்றியதென்று மகிழ்ந்து பாசறையிற்சென்று சுப்பிரமணியக்கடவுளைத் துதித்தார். அவர் வீரவாகுதேவரைநோக்கி, "அன்பனே, நீ பானுகோபனை வருந்திக்கொன்றாய்; வேண்டியவரம் என்னை." என்றருளிச்செய்ய வீரவாகுதேவர் அதுகேட்டு, "தேவரீருடைய திருவருளின்றி அடியேன் செய்ததியாது?" என்றுகூறி, "உமது திருவடிகளை என்றும் மறவாதிருக்க வரந்தரல்வேண்டும்." என்றனர். சுப்பிரமணியக் கடவுள் "அங்ஙனமேயாகுக." என்றருளிச்செய்தார்.

பானுகோபன் இறந்த சமாசாரத்தை ஒற்றர்கூறச் சூரபன் மன்கேட்டுச் சிங்காசனத்தில் வீழ்ந்தரற்றி அவனது உடலை அவு ணர்கள் கொண்டுவரக்கண்டு வருந்திச் சிரத்தையும் கரத்தையும் மார்பையும் பொருத்துவன்; பார்ப்பன்; புரளுவன்; சோர்வன்; வாய்விட்டலறுவன். அவனது துயரை யார்சொல்லவல்லவர். அத னைப்பதுமகோமளையும் மகேந்திரபுரியிலுள்ளவர்களும் கேட்டு அலறினார்கள். அழுகுரலேமிக்கது.

---

## சிங்கமுகாசுரன் வதை.

சூரபன்மன், அதன்பின், ஒற்றரை நோக்கி, "நீவிர்சென்று ஆயிரம சிங்கங்களின் வதனங்களைப்பெற்ற சிங்கமுகாசுரனை இட்டு வருதிர்; அவனுக்கு நம்பகைவர்களை இரையாக்குதல் வேண்டும்." என்றுகூற; அவர்கள் வடதிசைக்கடலில் ஆசுரநகரத்தையடைந்து நிகழ்ந்தவற்றைச் சிங்கமுகனுக்குரைப்ப; அவன் அவர்களுடன் மகேந்திரபுரியை யணுகிச் சூரபன்மனிடம் சென்று, "அண்ணலே, என்[illegible]க் கூவியதென்னை?" என்றுவினவ; அவன் சிங்கமுகாசுரனை

வல்லை" என்றுகூறிச் சரமாரிபொழிந்தனன். வீரவாகுதேவர் அவனுடைய தேரைக்கணைகளாலழித்து, வாயுப்படை, தேயுப்படை, யமப்படை, சூரியப்படை, வருணப்படை, நிருதிப்படை இந்திரப்படை, பிரமப்படை, சக்கரப்படை என்பனவற்றை அவன்மீது தூண்டினர். இவைகளெல்லாம் வச்சிரயாக்கைபெற்ற சூரபன்மன்மீது பட்டுத்தெறித்துத்துகள்பட்டன. பின், சூரபன்மன் வீரவாகுதேவரதுவில்லைச் சரங்களாற்றுணித்து ஒருதண்டத்தைச் செலுத்த அவ்வீரவாகுதேவர் இரத்தம்சொரியத்தேரில் விழுந்தார்.

சுப்பிரமணியக்கடவுள், இதனைத் திருவுள்ளத்திற்கொண்டு தேரினோடு எதிர்ப்பட; சூரபன்மன் அவரைக்கண்டு, "உனது சேனையழிந்தது; அவற்றின்றலைவன் விழுந்தனன்; பாலனே நீ என்னுடன்சமர்புரியவல்லைகொல்; ஒருகணப்பொழுதில் உன்னை யழிப்பேன்" என்றனன். திருவிளையாடல் புரியும் சுப்பிரமணியக்கடவுள் அதுகேட்டுப் புன்முறுவல்புரிந்து, "வீரர்களுக்கு இளமை இல்லை; வல்லையேல்வெல்லுதி" என்றருளினர். சூரபன்மன் சுப்பிரமணியக்கடவுள்மேற் சரமாரிபொழிந்தான். சுப்பிரமணியக்கடவுள் அவனது வில்லைச் சரங்களால் முரித்து தேரையழித்து அவன் ஏவியமுத்தலைப்படையைக்கடிந்து, உறுக்கி அறுத்தார். சூரபன்மன் பாசுபதப்படையை ஏவச் சுப்பிரமணியக்கடவுள் திருக்கரத்தை நீட்டி ஏற்றருளி நகைத்து அவனை நோக்கி, "தேவரைச்சிறைவிடுதி; அதனால் உய்வை" என்றனர். சூரபன்மன் அதுகேட்டு மதிக்காது; மட்டில்லாதசேனையுடன் இனிவந்துவெல்லுவோம் என்றுன்னி மாயமாகித்தன் அரண்மனையடைந்தான். பூதர்கள்வடவாயில்காக்கும் அதிசூரனையும் அவுணர்களையும் வதைத்து; அங்கேநின்ற அதன்கோபுரத்தைப் பிடுங்கிக் கடலிலெறிந்து சென்றுசுப்பிரமணியக்கடவுளைவணங்கி அவரைச்சூழ்ந்து பாசறையை யடைந்தார்கள். சூரியனும்மறைந்தான் சூரபன்மன் போரில்தோற்றதனை ஒற்றர்கள் பானுகோபனுக்குரைக்க; அவன் தந்தையை யடைந்து முற்பகல் நிகழ்ந்தவற்றை யுரைத்துத் தன்னரண்மனையேகினன்.

## மூன்றுநாட் பானுகோபன் யுத்தம்.

அடுத்தநாள், பானுகோபன் எழுந்து மாயையை நினைந்து, அவள்தோன்ற; அவளிடம் மாயப்படைக்கலத்தைப் பெற்றுச் சேனைகள் சூழ மதிற்புறத்தை யணுகி, அசுவமுகனை வீரவாகுதேவரிடம் "போருக்கெழுதிர்" என்று தூதனுப்பினன். வீரவாகுதேவர் சுப்பிரமணியக்கடவுளை வணங்கிப் போர்க்களத்தைச் சேனைகள் சூழ வடைந்தார். இருதிறச்சேனைகளும் பொருதன. வீரவாகுதேவரும் பானுகோபனும் வலசாரி இடசாரி வந்து சரமாரி தூவினர்கள். வீரவாகுதேவர் பானுகோபனுடைய தேரையழித்து அனேக படைகளைச் செலுத்தி ஆரவாரித்தார். பானுகோபன் அதுகண்டு மாயையாலொளித்து மாயைப்படையைச்செலுத்தி வீரவாகுதேவர் முதலியவர்களைப் பிணித்துச் சுத்தோதக சமுத்திரத்திலிட்டுச் சூரபன்மனிடம் சென்று நிகழ்ந்தவற்றைக் கூறி மகிழ்ந்தான். அப்பொழுது சூரியன் அஸ்தமித்தான். நாரதமுனிவர் அன்று நிகழ்ந்தவைகளைச் சுப்பிரமணியக்கடவுளிடம் கூற; அவர் வேற்படையைச்செலுத்த; அது மாயையை விலக்கியது. வீரவாகுதேவர்வந்து மகேந்திரபுரத்தைக்கண்டு வெகுண்டு, "பானுகோபனை வதைத்தே எம்பிரான்முன் செல்லுவேன்; இதுமுடியாதாயின் எரிபுகுவேன்" என்று சபதம்கூறி மகேந்திரபுரத்தின் மேற்றிசைவாயிலையடைந்து, வியாக்கிரமுகனை வதைத்தார். அப்பொழுது சூரியனுதித்தான்.

---

## இரணியன் யுத்தம்.

சூரபன்மன், இதனை ஒற்றாலறிந்து வேதங்களை யுணர்ந்த இரணியன் என்னும் புதல்வனை யுத்தத்துக்கு அனுப்ப; அவன் சென்று யுத்தம்புரிந்து, "இனியான்யுத்தம்புரியின் இறத்தல் நிச்சயம்; இனி எந்தையும் தமரும் இறப்பார்கள்; கடன்செய்வதற்கொருவருமில்லை" என்று எண்ணிக்கடலில் மீன்வடிவுகொண்டொளித்தான்.

## அக்கினிமுகாசுரன் வதை.

அடுத்தநாள், சூரபன்மன் அக்கினிமுகாசுரனை யனுப்ப அவன்வந்து வீரவாகுதேவருடன் பொருது, அவருடைய தம்பியர்களில் விரமாபுரந்தரனொழிந்த ஏழுவீரர்களையும் பாசுபதாஸ்திரத்தால் வதைத்து, தன்னகர்க் காளியைப்போரிற்றாண்டினன். அக்காளி, வீரவாகுதேவரைக்கண்டு சிறிதுநேரம் யுத்தம்புரிந்து, அஞ்சி, அவரை வழிபட்டுச்சென்றனள். பின்பு வீரவாகுதேவர் வீரபத்திரப்படையைச் செலுத்தி அக்கினிமுகாசுரனை வதைத்தார். வீரவாகுதேவர் இந்த யுத்தத்தில் நவவீரர்களுள் எழுவர் உயிர் துறந்ததனையுணர்ந்து, ஒருகணையில் அவர்களுடைய உயிரை விடுமாறு உகிரினால் திருமுகமெழுதி வில்லிற்பூட்டி எவினர். அது சென்று யமன் முன் விழுதலும் அவன் அதனையெடுத்து வாசித்து உணர்ந்து எழுவீரர்களுடைய உயிரையும் திருக்கைலாச மலையிற் கண்டு வணங்கிப் பூமியிற்செல்லுமாறு அனுப்பினன். வீரவாகுதேவர் அவர்களைத்தழுவி யுடல்பூரித்தார். யமன் வீரவாகுதேவரிடம்வந்து வணங்கி, "என்மீது குற்றமில்லை; அவர்கள் திருக்கைலாசத்துக்குச் சென்றார்கள்." என்றான்.

---

## மூவாயிரம் பிள்ளைகள் வதை.

அக்கினிமுகாசுரன் இறந்த சமாசாரத்தைச் சில தூதுவர்கள் சென்று சூரபன்மனுக்குச் சொன்னார்கள். அவன் அதனைக் கேட்டுத் துன்புற்றுப் புலம்பினன். அப்பொழுது மூவாயிரம் பிள்ளைகள் வந்து தந்தையைத் தேற்றிச் சேனைகள்புடைசூழ யுத்தகளத்தையடைந்து போர்செய்தார்கள். பூதர்களும் அவர்களைக் கண்டு நெறநெறென்று பற்கடித்து வில்வளைத்து யுத்தம் புரிந்தார்கள். மூவாயிரர் மிக்கவிறலுடன்பொருது பூதர்களைக் கொன்றார்கள். இலக்கவீரர்களில் ஆயிரவர் அதனைக்கண்டு வெகுண்டு யுத்தம்புரிய இவர்கள் அவர்களுடைய தேரையழித்தார்கள். விசயனொழிந்த மற்றைய வீரர்கள் மூவாயிரர்களின் வலியினால் மனமுடைந்தனர். விசயன் இதனைக்கண்டு சீறிச் சரமாரிசொரிந்து

அவர்களை வதைத்தார். அவர்கள் திரும்பவும் உயிர்பெற்றெழுந்து யுத்தம்புரிந்தார்கள். விசயன் இதனைக்கண்டு மனம்நொந்து சுப்பிரமணியக்கடவுளைத் தியானஞ்செய்ய; அவர் "ஆகாயத்தில் எழுந்தருளி, "அன்பனே, இவர்கள் பிரமனுடைய வரத்தால் உயிர் பெற்றெழுந்தார்கள்; இந்தவைரவப்படையால் இவர்களைக்கொல்லுதி." என்று அருளிச்செய்து ஒரு வைரவப்படையைக்கொடுத்து மறைந்தனர் அதனை அவர்களறிந்து மாயவள்படையை ஏவ; விசயன் சுப்பிரமணியக்கடவுள் கொடுத்த வைரவப்படையை விட அது சென்று மாயவள்படையை யழித்து மூவாயிரரையும் வதைத்தது. அதனை ஒற்றர்கள் சூரபன்மனுக்கு அறிவித்தார்கள். அவன் துன்புற்றுப் புலம்பினான். அப்பொழுது சூரியனும் அஸ்தமயனமாயினான்.

---

## தருமகோபன் வதை.

அன்றிரவு, தருமகோபன், சூரபன்மனிடம் வந்து வணங்கி, "நான்சென்று பகைவரையுயிர்குடித்து வருவேன்" என்றுசொல்லி விடைபெற்றுக்கொண்டு திக்குயானைகளுள் ஒன்றாகிய புண்டரீகம் என்னும் யானைமீதேறி எண்ணிலாப்படைகள் சூழ, யுத்தகளத்திக்கு வந்து பூதர்களுடனும் இலக்கவீரர்களுடனும் யுத்தம் புரிந்து அவர்களின் வலியைத்தொலைத்தான். வீரமார்த்தாண்டன் இதனைக்கண்டு உருத்துத் தருமகோபனுடன் வந்த அமைச்சரை யட்டான். தருமகோபன் ஏறிவந்த புண்டரீகம் என்னும் யானை இதனைக்கண்டு வெகுண்டு பூதர்களைக் காலிற்கொன்றது; மருப்பிற் கொன்றது; வாலிற் கொன்றது; கையாற் கொன்றது; இதனாற்பூதர்கள் அநேகர் உயிரிழந்தனர். வீரதிவாகரன் இதனைக் கண்டு கணைகள்சிந்தி அதனை மூர்ச்சையாக்கினான். பின்பு வீரதிவாகரனையும் வீரமாபுரந்தரனையும் தருமகோபன் வென்றான். வீரவாகுதேவர் இதனைக்கண்டு ஒருவேலை அவன்மீது செலுத்தலும் அது அவன் மார்பிற்பட்டு முதுகிற்சென்றது, அதனால் அவன் இரத்தம் சொரிய யானைமீது கிடந்தான். யானை அதனைக்கண்டு சீறி வீரவா

சென்று பூமியில் வீழ்ந்து கிடந்தான். நவவீரர்களுள், வீரவாகுதேவரொழிந்த எண்மரும் இலக்கரும் பானுகோபனுடன் விறலோடுபொருது தோற்றனர். வீரவாகுதேவர், இதனைக்கண்டு போர்க்கு எதிர்க்க, பானுகோபன் அவரைநோக்கி. "நீ, பிரமனல்லை; திருமாலல்லை; சுப்பிரமணியக்கடவுளல்லை; ஒருதூதன் என்னுடன் பொருதற்குவல்லை கொல்" என்றுசொல்லி நக; வீரவாகுதேவர், "வீரர்கள் வீரம்கூறார்" என்றனர். பானுகோபன், அது கேட்டுச் சினந்து சரமாரிதூவ; வீரவாகுதேவரும் சரமாரிதூவி அவனுடைய கிரீடத்தைத்தள்ளி அரணையும் அழித்தார். அப்பொழுது, முன்னுடைந்த பூதர்கள் வீரவாகுவின் புடையிற் சூழ்ந்தார்கள். பானுகோபன், இதனைக்கண்டு மோகப்படையைச் செலுத்த, வீரவாகுதேவர் முதலியவர்கள் மயங்கித்தூண்போல் அசைவற்று நின்றார்கள். சுப்பிரமணியக்கடவுள் இதனைத் திருவுளத்திற்கொண்டு அமோகப்படையைச்செலுத்தியருளினார். அதனால், வீரவாகுதேவர்முதலியவர்கள் மயக்கந்தெளிந்தார்கள். பின்பு வீரவாகுதேவர், பாசுபதாஸ்திரத்தை ஏவுமாறுகையிலெடுத்தனர். பானுகோபன் அதனைக்கண்டு அஞ்சி, மாயமாய் ஒளித்துத் தனதரண்மனை சேர்ந்தான். வீரவாகுதேவரும் பூதப்படைகளும் சென்று பாசறையிற் சுப்பிரமணியக்கடவுளை வழிபட்டார்கள். அப்பொழுது, சூரியனும் மேற்றிசைச் சமுத்திரத்திற் படிந்தான், சூரபன்மன் ஒற்றரால் நடந்த சமாசாரத்தையுணர்ந்து "நாளை, யான்படையோடு சென்று சுப்பிரமணியக்கடவுளை வென்று மீள்வேன்." என்று எண்ணிவதிந்தான்.

## இரண்டாநாட் சூரபன்மன் யுத்தம்.

அடுத்தநாள், சூரியனுதயமாகச் சூரபன்மன், அசுரேந்திரன் அதிசூரன் என்பவர்களுடன் இரதகஜதுரகபதாதி என்னும் நால்வகைச்சேனைகளும்சூழப்போர்க்களத்தைநோக்கிவந்தான. இந்திரன் அவன் வருதலைக்கண்டு திடுக்குற்றுச்சுப்பிரமணியக்கடவுளி

டம் சென்றுகூறினன். சுப்பிரமணியக்கடவுள் அதுகேட்டு வாயு தேவன் சாரத்தியம் புரியும் தேரிலேறி இந்திராதி தேவர்களும் ஆயிரவெள்ளம் பூதர்களும் புடைசூழ எழுந்தருளிவந்தனர். இரு திறச்சேனைகளும் நெருங்கி யுத்தம் புரிந்தன. இரதங்கள் உடைந் தன; யானைகளும் குதிரைகளும் உடல் துணிந்தன. படைகள் அழிந்தன. பூதரில் உக்கிரனும் அவுணரில் அதிசூரனும் எதிர்த்து யுத்தம் புரிந்தார்கள். உக்கிரன் அதிசூரனது தேரினை உடைத் துக் குதிரைகளை உதைத்தான். அதிசூரன் வேறுதேரிலேறி அக் கினிப்படை, வருணப்படை, யமப்படை, வாயுப்படை, பிரமன் படை என்பனவற்றை ஏவி விட்டான். இவற்றையெல்லாம் உக் கிரன் தன் பேழ்வாய்திறந்து விழுங்கிமகிழ்ந்தான். பின், அதி சூரன் பாசுபதப்படையைச் செலுத்த உக்கிரன் பஞ்சாக்ஷரத்தைச் செபித்து நிராயுதனாய் நின்றனன். அதுகண்டு பாசுபதப்படை சிவபெருமானிடம் சென்றது. அதிசூரன் இதனைநோக்கித் தேரி னின்றும் இறங்கித் தண்டினைச் சுழற்றி மல்யுத்தம் புரியவந்தான் உக்கிரன் அதனைப் பறித்து அவன்மார்பின்மீதடித்து அவனைக்கொ ன்றான். பூதரில்கனகன்என்பவனையும், உன்மத்தன் என்பவனையும், மந்தன் என்பவனையும்வீட்டி தாரகாசுரனுடையபுத்திரனாகிய அசுரேந் திரன்தேவசேனைகளுள், தண்டகன், சோமுகன், விசயன் என்பவர் களோடு யுத்தம்புரிந்து அவர்களைப் புறங்கண்டு வீரவாகுதேவ ரோடு யுத்தம்புரிந்தான். வீரவாகுதேவர் அவனது தேரிலேறித் தமது வாட்படையினால் ஒருகரத்தைத் துணித்துவதைத்தார். அவுணர்கள் அதனைக்கண்டு அஞ்சி ஓடிப்போய்ச் சூரபன்மனுக் குரைத்தார்கள்.

சூரபன்மன், எதிர்த்துச்சென்று சரமாரிதூவி இலக்கம் வீரர்களையும் சாத்தாற்றுளைத்து வீரதிவாகரன், வீரவரக்கன், வீர மகேந்திரன, வீரதீரன் வீரமகேசன், வீரகோளரி, வீரபுரந் தரன், வீராந்தகன், என்பவர்களைவென்று வாகைமாலைசூடினன். இதுகண்டு வீரவாகுதேவர் போர்க்கெதிர்ப்ப; சூரபன்மன் அவ ரைக்கண்டு நகைத்து, "தூதனாகியநீயோ என்னுடன் பொர

நோக்கி, "நீ சென்று பகைவர்களைவென்று வருதி" என்றனன். சிங்கமுகாசுரன் அதுகேட்டு அவனிடம் விடைபெற்றுத்தனதரண்மனையையடைந்து வயிறாரவுண்டு, தேர்மேலேறி இலக்கம்வெள்ளஞ்சேனை புடைசூழ யுத்தகளத்தை யடைந்தான். இந்திரன் முதலியதேவர்கள் இதுகண்டு, வாடி, ஓடிப்போய்ச் சுப்பிரமணியக்கடவுளை வணங்கி, "எம்பிரானே, சிங்கமுகாசுரன் யுத்தத்திற்கு வருகின்றான்; வருகின்றான். அவன் சூரபன்மனிலும் வலியன்," என்றுசொல்லி நடுங்கினார்கள். வீரவாகுதேவர் இதனைக்கேட்டுச் சுப்பிரமணியக்கடவுளிடம் விடைபெற்றுக்கொண்டு தேவர்களும் பூதப்படைகளும் சூழ யுத்தகளத்தையடைந்தார். இருதிறப்படைகளுக்கும் போர்விளைந்தது. பூதரில் சிங்கனும் அவுணரில் தசமுகனும் யுத்தம்புரிந்து சிங்கன்வென்றான்; தசமுகன் வீழ்ந்தான். இலக்கரில் அனகன் என்பவன் அவுணசேனைகளைச் சரமாரி தூவியழித்தான். இதுகண்டு துன்முகன் பலவடிவங்கள்கொண்டு பூதரையழித்தான். விர்திவாகரன் அப்பொழுது அவன் மாயத்தையழித்து அவனைத்துரத்தினான். சிங்கமுகாசுரன் இதுகண்டுசீறி எதிர்த்தான். அவன், பூதர்கள் வீசும்மரங்களையும் மலைகளையும் நாசியினால் உயிர்ப்பன்; அவை தூளிபடுவன. பூதர்கள் அவன்மேல் எறியும் மரங்களும் மலைகளும் அவனுடம்பிற் பட்டவிடத்தும் உடைந்து விழுவன. அவன், யானைக்கூட்டத்தில் ஓர் சிங்கேறு புகுந்தது போலத் தேரின்இறங்கிப் பூதக்கூட்டத்திற் பாய்ந்து விளங்கினன்; அவன் பூதர்சிலரை அண்டமுகட்டில் வீசுவன்; சிலரை வாயிற் குத்துவன். சிலரைச் சுழற்றுவன். சிலரைத்திகாந்தத்தில் வீசுவன். இவ்வாறுசெய்ய அவனால் அனேகபூதர் மாண்டனர். இதனை அக்கினிக்கண்ணன் என்னும் பூதப்படைத்தலைவன் கண்டு தண்டமொன்று வீசினன். அதுசென்று தேர்ப்பாகனை மோதியது. சிங்கமுகாசுரன் அப்பொழுது ஒருதண்டம்வீச; அதுசென்று அக்கினிக்கண்ணனை மோத அவன் மூர்ச்சையாயினான்.

பின்பு, சிங்கமுகாசுரன் சுமாலி தண்டி முதலிய வீரர்களை வென்று பகைவர் தேர்களுட் சிலவற்றை எறிந்தான். சிலவற்றை ஒன்றோடொன்று மோதினன்; சிலவற்றை முரித்தான்; சிலவற்றை உடைத்தான்; பூதர்கள் அஞ்சி ஓடினார்கள். வீரவாகுதேவர் இது கண்டு வெகுண்டு வாட்படைபிடித்து யுத்தம்புரிந்து சிங்கமுகாசுரனது குமாரர்களாகிய நூற்றுவரையும் கொன்று அவர்களது தேர்களையழித்தார். அப்பொழுது சிங்கமுகாசுரன்சாமாரி தூவிச்சிலைவளைத்து மாயாபாசத்தை வீசி வீரவாகுதேவரையும் இலக்கரையும் பூதர்களையும் கட்டிப் பாற்கடலிலுதயகிரியிலிட்டான்.

இந்திரன் முதலிய தேவர்கள் அஞ்சி "இனிஎன்செய்வோம்" என்றுசொல்லி, ஓடிப்போய்ச் சுப்பிரமணியக்கடவுளுக் குரைத்தார்கள். அவர் "நன்று" என்றுசொல்லித் தேர்மேலேறி ஆயிரவெள்ளம் பூதசைனியம் புடைசூழத் தேவர்கள் தாழ சின்னமூதப் பல வாத்தியமுழங்க யுத்தகளத்தையடைந்தார். சிங்கமுகாசுரன் பூதர்களைக்கண்டு, "இவர்களை உண்டுவிடுதலே தக்கது," என்றுசொல்லி நெறநெறென்று பற்கடித்து அண்டமுடியைத் தலையுற ஓர்வடிவு கொண்டு ஈராயிரம் கரங்களாலும் ஒருங்கே ஆயிரவெள்ளம் பூதர்களையும் வாரி வாரி விழுங்கி யாரவாரித்து, சுப்பிரமணியக்கடவுள் தனித்து நிற்பதைக்கண்டு மகிழ்ந்து, "எங்கள் பகைவர்களைச் சிறையிட்டோம்; நீ அவர்களிலொருவனல்லை; எங்களுக்குப்பகையல்லை; அமர்புரிய வந்ததென்கருதி." என்றுவினவ; சுப்பிரமணியக்கடவுள், "எளியாரை வலியார் வருத்தின் அவரையழிப்பேம்" என்று அருளிச்செய்தார். அப்பொழுது சூரபன்மன், ஒற்றர்கள் வந்து சிங்கமுகாசுரன் சுப்பிரமணியக்கடவுளது சேனைகளை உண்ட சமாசாரத்தைச் சொல்லக்கேட்டு மனமகிழ்ந்து பின்னும் பலசேனைகளை யுத்தகளத்துக்குச்செல்லத்தூண்டிக்கோபுரத்துச்சியிற்சென்று தம்பியின் யுத்தத்தைக்கண்டான். சுப்பிரமணியக்கடவுள் சிங்கமுகாசுரனது வயிற்றுளிருக்கின்றவர்களை மீட்கத் திருவுள்ளங்கொண்டு வில்வளைத்து நாண்பூட்டி ஒருசாந்தூண்டினர். அதுசென்று சிங்கமுகாசுரனது மார்பிற்குற்றி முதுகிற்பறிந்தது. பூதர்கள் இது

சமயம் என்று அத்துவாரத்தால் வெளியில் வந்தார்கள். சிங்கமுகாசுரன் சினந்து அதனை அங்கையினால் அடைத்தான். சுப்பிரமணியக்கடவுள் பின்னும் ஒருகணையை ஏவ அது அவனது நெற்றியிற்பட்டு அவன் மயங்க முன் அடைத்தகையும் நெகிழ்ந்தது. பெருடம்புபடைத்த ஆயிரவெள்ளம் பூதரும் அம்புபட்ட துவாரத்தால் வந்து சுப்பிரமணியக்கடவுளைச் சூழ்ந்து துதித்தார்கள். சுப்பிரமணியக்கடவுள் பின்னும் ஒருசரம் தூண்ட அதுசென்று வீரவாகுதேவர் முதலியவர்களை மீட்டு அச்சுப்பிரமணியக்கடவுளின் முன்னிலையில் விட்டது. சிங்கமுகாசுரன் இதுகண்டு சரமாரிசிந்தினான். சுப்பிரமணியக்கடவுள் அப்பொழுது அவனது கைகளைக் கள்ளிக்கவைகளை முப்பது போன்று எழுசரம் தூண்டித் தடிந்தார். அக்கைகள் திரும்பவும் முளைத்தன. சிங்கமுகாசுரன் இனிவாளாவிருத்தல் கூடாதென்று எண்ணிச் சுப்பிரமணியக்கடவுளைப் பிடிக்குமாறு கைகளை நீட்டிக்கொண்டு வந்தான். சுப்பிரமணியக்கடவுள் அவனது ஆயிரஞ்சிரங்களையும் ஈராயிரம் கரங்களையும் தடிந்தார். அவை பின்னும் முன்போல் முளைத்தன. சுப்பிரமணியக்கடவுள் அது கண்டு சிங்கமுகாசுரனை வதைக்கத் திருவுள்ளங்கொண்டு வேற்படையைத்திருக்கரத்திற்றாங்கினார். சிங்கமுகாசுரன் அவரைநோக்கி, "வேற்படை ஏவுதலன்றி வேறுபடைசெலுத்துமாறு பயின்றிலை; குமரனே." என்றுசொல்லி ஒருதண்டை ஏவினான். சுப்பிரமணியக்கடவுள் அதுகண்டு குலிசப்படையை நோக்கி, "நீ சென்று இவ்வஞ்சகனை அழித்துவருதி." என்று ஏவி விட்டனர். அக்குலிசப்படைசென்று தண்டத்தை அழித்து சிங்கமுகாசுரனது மார்பிற் புக்கு முதுகிற்பறிந்தது. அவன் இரத்தப் பெருக்கினுடன் வீழ்ந்து துயரத்தினோடு மடிந்தான். குலிசப்படை கங்கையிற் சென்று நீராடிச் சுப்பிரமணியக்கடவுளின் கரத்தையடைந்தது தேவர்கள் எங்கள் "இன்னல் தொலைந்தது; தொலைந்தது." என்று சொல்லி மலர்மாரி தூவிப் பாடி யர்டினார்கள். சுப்பிரமணியக்கடவுள் தேவர்களும் இலக்கரும் பூதப்படைகளும் சூழப் பாசறையையடைந்தார். சிகரியிலிருந்த சூரபன்மனிடம் ஒற்றர்கள்சென்று, "சிங்கமுகாசுரன் மாண்டான்" என்று சொல்ல; அவன் நீர்குடித்த

மேகம்போல நிலத்தில் விழுந்து துயரக்கடலுள்மூழ்கி வக்கிரத்தம் விள்ளப்பேழ்வாய்திறந்து புலம்பியழுதான்.

---

## சூரபன்மன் வதை.

பின்பு, சூரபன்மன் துயரநீங்கி "ஆயிரத்தெட்டண்டங்களிலுமுள்ள சேனைகளை எல்லாம் கொணர்திர்" என்று பணித்து நீராடி அடிசிலுண்டு திருநீறுபூசி கள்பமணிந்து கலன்கள்பூண்டு அளவில்லாத யானையாளிகளும் குதிரைகளும் பேய்களும் இழுக்கும் ஒருதேரிலேறிச் சேனாசமுத்திரம் புடைசூழ யுத்தகளத்தை யடைந்தான். அவுணர்களும் பூதர்களும் எதிர்த்து யுத்தம்புரிந்தார்கள். சூரபன்மனுடைய சேனையால் இலக்கத்தெண்மரும் வீரவாகுதேவரும் பொருது தோற்றார்கள். சுப்பிரமணியக்கடவுள், அதுதெரிந்து சூர்பன்மனுக்கு நேரிற்சென்று சோனாமேகம்போற் சரமாரிதூவி யவுணர்களை வதைத்தார். சூர்பன்மனுக்குப் பின்பும் அண்டவழியாற்சேனைகள்வர; அவ்வழியைச் சுப்பிரமணியக்கடவுள்சரங்களால் அடைத்தார். சூரபன்மனதுகண்டு அவரைநோக்கி, "அழியாத யாக்கை எனக்குண்டு; என்குற்றேவல்புரியும் தேவர்களுக்காகப் பொருதற்கு வந்தனை; பாலனாயினும் விடுவதில்லை." என்றான். சுப்பிரமணியக்கடவுளதுகேட்டு, "தேவர்களைச் சிறையிட்ட கயவனே, உனக்கு எனது கணைகளேவிடை" என்று சொன்னார். சூரபன்மன் அப்பொழுது சரங்களைத்தூவிப் பூதர்களை அட்டுச்சுப்பிரமணியக் கடவுளின் தேரில் இருக்குங்கொடியை அறுத்தான். சுப்பிரமணியக்கடவுளும் எழுகணைகளால் சூரபன்மனுடையதேரில் இருக்கும் கொடியை யறுத்துச் சமுத்திரத்திலிட்டார். இதனைக்கண்ட அரிபிரமேந்திராதி தேவர்களாரவாரித்தனர். சூரபன்மன் ஆகாயத்திற்சென்று போர்செய்யச் சுப்பிரமணியக்கடவுளும் ஆண்டுச் சென்று பொருதனர். இவ்வாறு இவர்கள் பொருகின்ற இரதங்கள் பிலத்திற்செல்லுவன; நிலத்திற்செல்லுவன; திகாந்தங்களிற்செல்லுவன; கடலிற்செல்லுவன; வைகுந்தலோகத்திற் செல்லுவன; சத்தியலோகத்திற் செல்லுவனவாயின.

இங்ஙனம், இருவரும் சென்று யுத்தம்புரிந்தார்கள். சுப்பிரமணியக்கடவுள் இதனைக்கண்டு வெகுண்டு அவனது தேரை யழித்தார். அவன், இந்திரஞாலத்தினை நினைத்து அதுவா அதன்மீதேறி முன் சுப்பிரமணியக்கடவுள் அடைத்த அண்டவழியைத்திறந்து விட்டான். அப்பொழுது எண்ணில்லாத சேனைகள் வந்து சுப்பிரமணியக்கடவுளுடன் பொருதன. அப்பொழுது அவர்தமது நெற்றிக்கண்களால்நோக்க அவைகளெல்லாமழிந்தன. அக்கினிதேவன், சுப்பிரமணியக்கடவுளது தேரிற் கொடியாய்ச் சென்று விளங்கினான். சூரபன்மன் மாயையினால் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களின் பாருருக்கொண்டு தேவர்கள் தியங்க யுத்தம்புரிய; சுப்பிரமணியக்கடவுள் அவற்றை அழித்தனர். சூரபன்மன் அப்பொழுதுதனது தாயாகிய மாயையை நினைக்க அவள்வந்து, "அமிர்தகிரியை இவ்விடம் கொணருவையாயின் உனது இறந்த தம்பியரும் சேனைகளும் எழுவார்கள்" என்றுகூறி மறைந்தனள். சூரபன்மன் அதுகேட்டுத் தானேறிய இந்திரஞாலத் தேரினின்றிழிந்து ஒருசிங்கத்தின் மிடரிற்பாய்ந்து, இந்திரஞாலத்தேரை, "அமிர்தகிரியைக் கொணர்தி." எனப்பணித்தான். அது அவ்வாறு அந்தக்கிரியைக் கொணர்தலும்; சிங்கமுகாசுரன் முதலிய இறந்தவர்களெல்லாரு மெழ அரிபிரமேந்திராதி தேவர்கள் அஞ்சி ஓட்டமெடுத்தனர். சுப்பிரமணியக்கடவுள் அவர்களை, "அஞ்சன்மின்." என்று கரமமைத்து உருத்திரப்படையை எடுத்துவிடுதலும் அதுசென்று சூரபன்மனொழிந்த ஏனையவர்களை யழித்தது. பின்பு சுப்பிரமணியக்கடவுள் அவனது சிங்கத்தை அட்டு இந்திரஞாலத்தேரை இவண்வருதி என்றுகூறி வலியடக்கி அவனுக்குத்தமது விசுவரூபத்தைக் காட்டியருளினார். சூரபன்மன் சுப்பிரமணியக்கடவுளது விசுவரூபத்தில் தேவர்களும் தானும் ஆயிரத்தெட்டண்டங்களும் பிறவும் தோன்றக்கண்டு "இக்குமாரர் எனக்குமுன்வரமீந்தருளியசிவபெருமானேயாவர்." என்றுணர்ந்து பின்நல்லுணர்வு நீங்கி ஆகா இவன்செயல் நன்றுநன்றென்று கூறி, இந்திரன் முதலிய தேவர்கள் பொருட்டல்லவா நாமும் இவனும் போர்செய்ய நேர்ந்தது முதலில் அவர்களை உயிர்குடித்து பசியாறவேண்டுமென்றுன்னிச் சக்கரவாளப்புள்வடிவுகொண்டு தேவர்களை மூக்கினாலும் சிறகினாலும் அடித்துக் காலி

னாற்கீறி வருத்தினான். சுப்பிரமணியக்கடவுள் இந்திரனை மயிலுருக் கொள்ளுமாறு பணித்து அதன்மீதேறி வாட்படையினாற் சூரபன்மனது சக்கரவாளப்புள் வடிவைத் துணித்தார். சூரபன்மன் பின்னும் பல மாயவடிவங்கொண்டு ஓர்பால் யமனைப்போன்றும் ஓர்பால் இருள்போன்றும் ஓர்பால் வடவாமுகாக்கினிபோன்றும் பலவாறுபொருதான். சுப்பிரமணியக்கடவுள் அதுகண்டு தமது சத்தியாகிய வேற்படையை நோக்கி, "நீ சென்று இவனை அழித்து வருதி." என்றருளிச்செய்ய; அது சூரபன்மனைநோக்கி ஒளி கான்று சென்றது. சூரபன்மன் அதுகண்டு "அழியாவரம்பெற்ற என்னை இது அழிப்பது எங்ஙனம்" என்று எண்ணிச் சமுத்திரத்திலே கவைகளை விரித்துக் கனிகளையுதிர்த்து வேர்களைப் போக்கிக் கண்டாரச்சுற மாமரவடிவு *கொண்டு நின்றான். வேற்படை அங்ஙனம் நிற்கும் அவனைச் சங்கரித்து கங்கையில் நீராடிச் சுப்பிரமணியக்கடவுளின் கரத்தை யடைந்தது. சிவபெருமான் கொடுத்த வரத்தின் வலிமையினால் வேற்படை பிளந்த இருபாதியும் மயிலும் சேவலுமாக உருவமைந்து சூரபன்மன் சுப்பிரமணியக்கடவுளுடன் போர்செய்ய வந்தான். சுப்பிரமணியக்கடவுள் அவனைக்கண்டு இனி இவனை ஆட்கொள்வோமென்று திருவுள்ளத்தெண்ணி இந்திரனாகிய மயிலையும் அக்கினிதேவனாகிய சேவலையும் நோக்கி, "நீவிர் உங்கள் வடிவுகளைக் கொள்ளுதிர்" என்று பணித்து, சூரனாகிய மயிலிற்குதித்து அவன் ஆணவவலிகெடத் திருநடம்புரிந்து, "இனி எம்மைச் சுமக்கும்பேறு உனக்குக் கிடைத்தது." என்றருளிச் செய்து பன்மனாகிய சேவலைநோக்கி "உனக்கு எமதுகொடியாகும் பேறு கிடைத்தது" என்று திருவருள்பாலித்து அவர்களுக்குத் தமது பேரானந்தப்பதவியை ஈந்தருளினார். தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். பரமபதியாகிய சிவபெருமான் குழந்தைவடிவு கொண்டு போர்செய்வதுபோலத் திருவிளையாடல் புரிந்து சூரபன்மனுக்குத் தமது பதத்தைக் கொடுத்தனரென்றால் அவனது தவ வலிமை எத்தன்மையது. பின்பு, அவன் போர்க்களத்திலுயிர்விட்டதைச் சமுத்திரத்தில் மீனாய்ஒளித்த இரணியன் அறிந்து சுக்கிரா

* இந்தமாமரவடிவம் மூலம் மேலாகவும் கவைகள் கீழாகவும் நின்றது "கீழ்மேனின்றவக் கொடுந்தொழிற் கொக்கின்" (கல்லா. முரு. துதி. 16-ம் அடி.) என்பர் கல்லாடனார்.

சாரியரை யடைந்து அவரைக்கொண்டு அனைவருக்கும் ஈமக்கடன் செய்து தவஞ்செய்யத்தொடங்கினன். சுப்பிரமணியக்கடவுள் மகேந்திரபுரத்தைக்கடல்கொள்ளுமாறு பணித்து அங்கேயிருந்த சயந்தன் முதலிய தேவர்களையும் மீட்டு தேவர்களும் பூதர்களும் புடைசூழத் திருச்செந்தூரையடைந்தார்.

யுத்தகாண்டம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

# ரு. தேவகாண்டம்.

---

சுப்பிரமணியக்கடவுளைத் தேவர்கள் அன்றிரவு அருச்சித்துத் துதித்தார்கள். அடுத்தநாள் அவர் தமது பிதாவாகிய சிவபெருமானை அருச்சித்து வணங்கி மயில்வாகனத்தின் மீதிவர்ந்து தேவர்களும் பூதர்களும் புடைசூழ்ந்து தோத்திரஞ்செய்துவரத் திருப்பரங்குன்றை யடைந்து அங்கே தேவகம்மியன்செய்த திருக்கோயிற்புக்குத் தேவர்களைத் தமதிருப்பிடம் செல்லுமாறு பணித்துச் சிங்காசனத்தில் வீற்றிருந்தார். அப்பொழுது பராசரமுனிவரது புதல்வர்களறுவரும் வந்து சுப்பிரமணியக்கடவுளை வழிபட்டு அவரது திருவருளைப் பெற்றுய்ந்தார்கள். நிற்க.

இந்திரன், தனது புதல்வியாகிய தெய்வயானையம்மை என்னும் மகளைச் சுப்பிரமணியக்கடவுளுக்குத் திருக்கல்யாணஞ் செய்ய வேண்டுமென்று பிரமதேவருக்கும் விஷ்ணுமூர்த்திக்கும் சொன்னான். அவர்கள், அதற்கு, "நன்று; நன்று" என்று சொல்லக் கேட்டு மனமுவந்து ஓர் ஒற்றனை நோக்கி "மேருமலைக்குச்சென்று எமது தேவியையும் மகளையும் இட்டுவருதி" என்றான். அது கேட்டு அவ்வொற்றன் மேருமலைக்குச்சென்று அவர்களுக்கு இத

னைக்கூற அவர்கள் மகிழ்ந்து ஐராவதயானையிலேறித் தேவமாதர்கள் புடைசூழத் திருப்பரங்குன்றை யடைந்தார்கள். அப்பொழுது மகேந்திரபுரத்தில் சிறைப்பட்டிருந்த தேவமாதர்கள் வந்து புலோமசையை வணங்கினர்கள்,

பின்பு, இந்திரன் சுப்பிரமணியக்கடவுளிடத்திற் சென்று வணங்கி, "எம்பிரானே இங்கே எனது புதல்வியைத் திருக்கல்யாணஞ் செய்தல்வேண்டும்." என்று பிரார்த்தித்தான். சுப்பிரமணியக்கடவுள் அதுகேட்டு "அங்ஙனமேயாகுக." என்றருளிச் செய்தார். இந்திரன்மகிழ்ந்து ஒற்றரைவிளித்து "நீவிர்சென்று காலையத்தினம் சுப்பிரமணியக்கடவுளது திருக்கல்யாணம் என்று முசுகுந்தன்முதலிய அரசர்களுக்கறிவிப்பீர்களாக." என்றான். அவர்கள் அங்ஙனமே எல்லாஅரசர்களுக்கும் அறிவித்தார்கள். இந்திரன் தேவதச்சனைக்கொண்டு அக்குன்றத்தில் ஒரு திருக்கல்யாணமண்டபத்தை அழகுறச் செய்வித்தான். நிற்க.

முற்காலத்தில் திருக்கைலாசமலையிலுள்ள நந்தனவனத்தில் சிவபெருமான் உமாதேவியோடு எழுந்தருளியிருக்கும் பொழுது ஒருமுசு வில்வங்களைப்பறித்துச் சிந்தியது. உமாதேவியார் அது கண்டு சீற; சிவபெருமான் விலக்கி; அம்முசுவைநோக்கி, "நீ பூமியிற்சென்று இம்முகத்துடன் அவதரித்தி" என்றருளிச்செய்தார். அந்தமுசு சிவபெருமானைவணங்கிப் பின்கருவூரில்மனுவமிசத்திலே அரசனாகப்பிறந்து சூரபன்மனுடைய ஆஞ்ஞாசக்கரத்தைக் கடவாது அரசுசெய்தது. அதுவே முசுகுந்தன் எனப்படும். சுப்பிரமணியக்கடவுளுடைய திருமன்றலையறிந்த அம்முசுகுந்தன்முதலிய அரசர்களும் அரிபிரமர்முதலியதேவர்களும் அச்சுப்பிரமணியக்கடவுளுடையதிருக்கல்யாணத்தைத்தெரிசிக்கத் திருப்பரங்குன்றத்தையடைந்தார்கள். அதன்பின்பு, தேவர்கள் பிரார்த்திக்கச் சுப்பிரமணியக்கடவுள் வாத்தியங்களாரவாரிப்ப மாதர்நடிப்ப இவைபோன்ற பலவளங்கள் விளங்க மயில்வாகனத்திவர்ந்து திருக்கல்யாணமண்டபத்தை யடைந்தார். அப்பொழுது சிவபெரு

மான் உமையம்மையோடு இடபாரூடராய் அவ்விடம் வந்து தமது
திருக்குமாரராகிய சுப்பிரமணியக்கடவுளைப் புல்லி உச்சி மோந்தார்.
அரிபிரமேந்திராதி தேவர்கள் சிவபெருமானை வணங்கித் துதித்
தார்கள். இந்திரன் தனது புதல்வியாகிய தெய்வயானையம்மை
யைத் தேவமகளிர் பணிசெய்து புடைசூழ்ந்துவர அழைத்துவந்து
சுப்பிரமணியக்கடவுளது பாங்கரில் இருத்தி அவர்களைத் தரிசனஞ்
செய்து சுப்பிரமணியக்கடவுளின் திருவடிகளை விளக்கி யருச்சித்து
மனைவியாகிய புலோமசை நீர் உகுப்பத் தெய்வயானையம்மையின்
திருக்கரத்தைச் சுப்பிரமணியக்கடவுளின் அங்கையில் வைத்து
"எனது புத்திரியை நல்கினேன்" என்று சொல்லி மகிழ்ந்தான்.
சுப்பிரமணியக்கடவுள் பிரமதேவர் சிருட்டித்துக்கொடுத்த திரு[illegible]
கல்யநாணைத் தெய்வயானையம்மையின் க[illegible]த்து, அவ
ருடைய கூந்தலி[illegible]லையைச் சூட்டி, அங்கினிவலம்வந்து அவரது
பா[illegible]ங்களைச் சிலையிலேற்றி விவா[illegible]ச்சடங்குகள் முற்றியபின் சிவ
பெருமானையும் உமையம்மையையும் வணங்கினார். அவர்கள் எமது
முதன்மையை உங்களுக்குக் கொடுத்தோமென்றருளிச் செய்து
பின் இடபாரூடர்களாய்த் திருக்கைலாசமலையை யடைந்தார்கள்.
தேவர்களும் முசுகுந்தன் முதலிய அரசர்களும் சுப்பிரமணியக்
கடவுளிடத்தில் விடைபெற்று தங்கள் ஸ்தானங்களை யடைந்தார்
கள். சுப்பிரமணியக்கடவுள் உலகம் உய்ய வேண்டித் தமது சத்தி
யாகிய தெய்வயானையம்மையுடன் அக்கினியும் உஷ்ணமும் போல
வுறைந்தருளினார்.

பின்பு, சுப்பிரமணியக்கடவுள் தேவர்கள் புடைசூழத் திருப்
பரங்குன்றை விட்டுநீங்கிச் சுவர்க்கலோகத்தையடைந்து தேவகம்
மியனைக்கொண்டு முன்போல அதில் நகரம்புரிந்து இந்திரனுக்கு
முடிசூட்டித் திருக்கைலாசமலையை யடைந்து கந்தவெற்பில் தெய்
வயானையம்மை பாங்கரின்மேவ வீற்றிருந்தார். இந்திரன் முன்
சூரபன்மனால் நேர்ந்த துயரை எண்ணி எண்ணி மனம்புண்பட்டுத்
தன்னரசைத் துறக்க எண்ணினான். அப்பொழுது தேவகுருவாகிய
வியாழன் வந்து அவனுக்கு உலகாயதமதத்தை உபதேசித்தார்.
இந்திரன் அவரது உபதேசத்தைக்கேட்டு மெய்யென்று மயங்கி,

சயந்தன்வசம் அரசினைநிறுவி, அந்தப்புரத்திற் சென்று புலோமசையுடன் திளைத்திருந்தான். சயந்தன் ஒருநாள் வியாழனை வணங்கி இதுவரையும் சூரபன்மனால் "யாம் வருந்தியதென்கொல்" என்று வினவ; அவர் கூறுகின்றார்.

தேவகாண்டம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

## ௬. தக்ஷகாண்டம்.

சத்தியலோகத்திலே, பிரமதேவர் தேவர்கள் துதிக்க வீற்றிருந்தபொழுது ஒருநாள் அவருடைய புதல்வர்களுள் ஒருவனாகிய தக்கன் அவரைநோக்கி, "முழுமுதற்கடவுள் யாவர்?" என்று வினாவினான். பிரமதேவர் அதனைக்கேட்டு, "என்னாலும் எனது பிதாவாகிய விஷ்ணுமூர்த்தியாலும் முடியும் அடியும் காண்டற்கரிய அக்கினி வடிவாய்நின்ற சிவபெருமானே முழுமுதற்கடவுள்; அவரைநோக்கித் தவம்புரிதி" என்றார். அவன் அதனைக்கேட்டு மானததடத்தையடைந்து சிவபெருமானைநோக்கி ஆயிரம் வருடம் தவம்செய்தான். சிவபெருமான் அவனுக்குத்தோன்றி, "உனக்குவேண்டும் வரம்யாது?" என்று வினவியருளினார். தக்கன் அவரைவணங்கி, "சுவாமீ, எல்லா உலகங்களும் எனது ஆணையில் நிற்கவும், தேவரீரது சத்தியாகிய உமையம்மை எனது புத்திரியாய் வளரவும், தேவரீர் வேதியவடிவுகொண்டு அவரைமணக்கவும் வரம் வேண்டும்" என்றான். சிவபெருமான் "அங்ஙனமேயாகுக" என்று வரம்கொடுத்து மறைந்தருளினார்.

பின்பு தக்கன், பிரமதேவரை நினைத்து அவரைக்கொண்டு தக்ஷமாபுரியை உண்டாக்கி வேதவல்லி என்னும் மனைவியாளுடன்

அரசுசெய்து ஆயிரம் புத்திரர்களைப்பெற்று அவர்களுக்கு உபநய னஞ்செய்து அவர்களை நோக்கி, "நீவிர் சிவபெருமானைநோக்கித் தவம்புரிந்து விரும்பிய வரங்களைப்பெறுதிர்." என்று சொல்லி அனுப்பினன். அவர்கள் அவன்சொற்படி மானததடத்திற் தவம் புரியும்பொழுது நாரதமுனிவர் ஆங்குவந்து அவர்களைநோக்கி, "நீவிர் சிருஷ்டித் தொழிலை விரும்பித் தவஞ் செய்கின்றீர்கள். அதனுற் பயனில்லை; முத்தியைவிரும்பித் தவம்புரிதிர்." என்றார். அவர்கள் அவர்சொற்படி தவஞ்செய்து முத்தியடைந்தார்கள். தக்கன் அதனையறிந்து வருந்திப் பின்னும் ஆயிரம்புத்திரர்களை ஈன்று அவர்களுக்கும் முன்னுரைத்ததுபோல் உரைத்தான். அவர்கள் அதுகேட்டு மானததடத்தையடைந்து தவம் புரிந்தார்கள். நாரத முனிவர் அப்பொழுதும் ஆங்குவந்து அவர்களுக்கு முத்தியை விரும்பித் தவம்புரியுமாறு உபதேசித்து அவர்களை முத்தியிலுய்த் தனர். தக்கன் இதனையறிந்து வெகுண்டு, நாரதமுனிவரை, "எவ் விடத்தும் சுழல்க." என்று சபித்து இருபத்துமூன்று புத்திரி களைஈன்று தருமர்முதலிய இருடிகளுக்கு விவாகஞ்செய்து கொடுத் துப் பின்னும் அச்சுவினி முதலிய இருபத்தேழு நக்ஷத்திரங்களை ஈன்று சந்திரனுக்கு விவாகஞ்செய்து கொடுத்து, "இவர்களெல்லா ரிடத்தும் ஒத்த அன்புடன் வாழ்தி." என்று பணித்தான். சந் திரன் தன் மண்டலத்தை யடைந்து அவர்களுள் கார்த்திகையினே டும் உரோகிணியோடும் மிகுந்த காதல்கொண்டு வாழ்ந்தான். ஒழிந்த தேவியர் அதனைக்கண்டு சினந்து தக்கனையடைந்து நிகழ்ந் ததை உரைத்தலும் அவன் சந்திரனுடைய கலைகள் தேயுமாறு சபித்தான். அதனால் அவன் பதினைந்து கலைகள்குன்றி ஒருகலை யுடன் பிரமதேவரை யடைந்து அவரிடம் நிகழ்ந்ததைச்சொல்லி அவர் கூறியபடி திருக்கைலாசமலையை யடைந்து சிவபெருமானை வணங்கி நிகழ்ந்ததை விண்ணப்பஞ் செய்தான். சிவபெருமான் ஒற்றைக்கலையுடன் இருந்த சந்திரனைச் சடையிற்சூடி மற்றைய கலை கள் நாளொவ்வொன்றாக வளர்ந்து பூரணமாகிப் பின் நாடோறும் ஒவ்வொன்றாகச் சுருங்கி இவ்வாறே எக்காலமும் நிகழுமாறு அருள் செய்தார். தக்கன் இதனையறிந்து சிவபெருமானைச் சினந்திருந் தான். நிற்க.

ஒருநாள், சிவபெருமான் உமையம்மை வாமபாகத்தில் மேவ எழுந்தருளி யிருக்கும்பொழுது அவ்வுமையம்மை சிவபெருமானை வணங்கித், "தேவரீரது மெய்வகையை அருளிச்செய்தல் வேண்டும்." என்று விண்ணப்பஞ்செய்ய; அவர் உமையம்மையை நோக்கி, "எமக்கு அருவம் உருவம் அருவுருவம் எனமூன்று திருமேனிகளுண்டு; அவை அருள்வடிவங்கள்." என்றருளிச்செய்தனர். உமையம்மையது கேட்டு, "அவை என்னுடையனபோலும்." என்றனர். சிவபெருமான் அதுகேட்டு அவரைநோக்கி, "நீ உன்னை நம்மெதிர் புகழ்ந்தாய்; எம்மையன்றி அணுவும் அசையாது," என்று அருளிச்செய்து தேவர் மனிதர் முதலிய சரப்பொருள்களினும் மரம் முதலிய அசரப்பொருள்களினும் உணர்வு பாலிக்கும் செயலற்று ஒரு கணப்பொழுது இருந்தருளினார். அப்பொழுது அரிபிரமேந்திராதி தேவர்களும் மனிதர்களும் பிறவும் சடத்துவமடைய; உமாதேவியார் சிவபெருமானை வணங்கி, "அடியேனுடைய பிழையைப்பொறுத்து எவற்றையும் எழுப்பியருள வேண்டும்" என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் அதுகேட்டு உருத்திரரை எழுப்ப அவர்கள் மல்லிகார்ச்சுனம் என்னும் தலத்தில் வந்து அவரை அருச்சித்தார்கள். அப்பொழுது சிவபெருமான் எவரையும் எழுப்பினர். பின்பு விஷ்ணு முதலிய தேவர்கள் திருக்கைலாசமலையை யடைந்து சிவபெருமானை வணங்கி, "நாம் சடமாயிருந்த பாவம் நீங்க அருள்செய்யவேண்டு"மென்று பிரார்த்திக்க; சிவபெருமான் அவர்களை நோக்கி, "அப்பாவம் உமையை யடைந்தது; நீவிர் உம்பதத்தை யடைந்து உங்கள் தொழிலை இயற்றுதிர்." என்றுவிடை கொடுத்தருளினார்.

பின்பு, சிவபெருமான் உமையம்மையை நோக்கி, "நீ தக்கனுக்கு மகளாகி [illegible] ம்." என்றருளிச்செய்ய அ[illegible] விடைபெற்றுக்கொண்டு காளிந்திநதியில் தாமரை மலரில் வ[illegible]ச்சங்காகி எழுந்தருளி[illegible]ருந்[illegible]ார். மாசிமகத்தில் தீர்த்த ஸ்நானஞ்செய்ய ஆங்கு வ[illegible] தக்கன் அதனை எடுக்க அது குழவியாயிற்று; அவன் உமையம்மை புதல்வியாயினள் என்று களித்து வேதவல்லியின் கரத்திலளித்து தன்னகரையடைந்து அக்குழவியை வளர்த்தான். உமையம்மை ஐந்துவயது கடப்ப; மாட

மொன்று புரிவித்துத் தவஞ்செய்தனர். ஏழுவருஷம் இவ்வாறு தவஞ்செய்த பின் வேதியவடிவுகொண்டு சிவபெருமான் ஆங்கு வந்து "நாம் உன்னை மணஞ்செய்ய வந்தோம்." என்றனர். உமையம்மை அதுகேட்டுச்செவிபொத்தி, "பொய்யனே, போதிபோதி." என்று சொல்லி ஒரு சாரகன்றார். சிவபெருமான் அவருக்கு எவருந் தெரியாவண்ணம் தம்வடிவுகாட்டி யருளலும் அவர் ஆனந்த பாஷ்பஞ்சொரிய வணங்கினார். தோழியர் "இவன் மாயம் வல்லன் கொல்" என்றெண்ணித் தக்கனிடத்திற்சென்றுஇதனைஉரைத்தனர். அவன் அங்கேவந்தது சிவபெருமான் என்று உணர்ந்து தவமாடத்தையடைந்து அவரைப்போற்றி தன் மாளிகையில் அவர்களை இட்டுவந்து திருமண மண்டபத்தை யியற்றுவித்து. சிவபெருமான்சிங்காதனத்தில்எழுந்தருள;வேதவல்லிஉமையம்மையைமணக்கோலம் பூட்டிச் சிவபெருமானின் பாங்கரிருத்தி வணங்கினாள். அரிபிரமேந்திராதி தேவர்கள் ஆங்குவந்து சிவபெருமானின் மணக்கோலத்தைத் தரிசித்தனர். தக்கன் அப்பொழுது வேதவல்லி சிரகநீர் விட உமையம்மையின் கரத்தைச் சிவபெருமானது கரத்துள் வைத்து, "என் தவப்புதல்வியைத் தேவரீருக்கு அளித்தேன்." என்று தத்தஞ்செய்தான். அப்பொழுது சிவபெருமான் விரைவாய் மறைந்தருளினர். தக்கன் அதுகண்டு கைபுடைத்து நகைத்து வெகுண்டு அவரை நிந்தித்தான்.

பின்பு, உமையம்மை தவமாடமடைந்து தவம்புரியச் சிவபெருமான் ஆங்கு விடைமேலெழுந்தருளித் திருக்கைலாசமலைக்கு அவரைக் கொண்டுபோயினர். தேவர்கள் தக்கனையடைந்து சிவபெருமானைத் தெரிசிக்குமாறுரைப்ப அவன் திருக்கைலாசமலையை யடைந்து பூதர்கள் தடுப்பத் தன்னகர்க்கு மீண்டு தேவர்களை "நீவிர் சிவபெருமானை மதியாதிருத்திர்." என்று பணித்து விடைகொடுத்தனன். அதன்பின்பு பிரமதேவர் ஒருயாகஞ்செய்[illegible] கொடங்கிச் சிவபெருமானையும் வணங்கி அவர்பொருட்[illegible]தேவரைவரித்து அருச்சித்தார். தக்கன் அதுகண்டு பிரமதேவரை வெகுண்டுரைத்துச் சிவபெருமானை நிந்தித்தான். நந்திதேவர் அதுகேட்டுச் "சிவபெருமானையின்றி யாகம்புரிபவர்களுடைய தலையும் உன்றலையும் அறுக; உன்பக்கலிருக்கும் தேவர்கள் சூ[illegible]ன்[illegible]

னால் துயருறுக." என்று சபித்துத் திருக்கைலாசமலையை யடைந்தார். அதனால், தேவர்கள் யாகஞ்செய்ய அஞ்சினார்கள். தக்கன் தேவகம்மியனைக்கொண்டு யாகசாலையொன்று வகுத்து சிவபெருமானையொழிந்த தேவர்களை வருவித்து யாகஞ்செய்யத் தொடங்கினான். அப்பொழுது ததீசிமுனிவர் ஆங்குவந்து "தக்கனே, சிவபெருமானையின்றி யாகம்புரியேல்" என்று சொல்லித் தக்கன் நிந்திப்பது கேட்டுப் பிரமவிஷ்ணுக்கள் அழியச் சிவபெருமான் சங்காரம் புரிந்து சிருட்டிக்குந் திருநடனத்தையும், விஷ்ணுவராகாவதாரமெடுத்தபொழுது அதன் கொம்பனைப் பறித்ததையும், அவர் ஆலாகல விஷமுண்டதையும், தாரகாவனத் திருடிகளின் கர்வத்தை அடக்கியதையும் காசியில் மணிகர்ணிகையில் கயாசுரனது தோலையுரித்துப் போர்த்ததையும், வைரவக்கடவுளைப் பெற்றுப் பிரமதேவரது ஒருதலையைக் கிள்ளுவித்து விஷ்ணுமூர்த்தியின் இரத்தநீரை யபகரித்ததையும், சலந்தராசுரனை வதைத்ததையும், விஷ்ணுவை யிடபமாக வூர்ந்ததையும், கங்கையைத் தரித்ததையும், விநாயகக்கடவுளைப் பெற்றுக் கயமுகாசுரனை வதைப்பித்ததையும் விரித்துணர்த்திச் சிவபெருமானே முழுமுதற்கடவுளென்று உபதேசித்தார். தக்கன் அதனைக்கேட்டும் மதியாது யாகஞ் செய்யத் தொடங்கினான். ததீசிமுனிவர், யாகஞ்செய்தற்கு ஆங்குவந்த பிராமணரைப் "பிறந்திறக்கக்கடவீர்கள்" என்று சபித்துத் தமதாச்சிரமத்தை யடைந்தார்.

பின்பு, தக்கன் வேதியர்களுக்கு வஸ்திரதானம் அன்னதானம் இரணியதானம் முதலியவற்றைச்செய்து யாகஞ்செய்தான். நாரதமுனிவர் சிவபெருமானுக்கு இதனை உரைக்க; உமையம்மை சிவபெருமானிடத்துவிடைபெற்று யாகசாலையையடைதலும்தக்கன் அவரைக்கண்டு பரமபதியாகிய சிவபெருமானை நிந்தித்து, "விரைந்துபோதி" என்றான். உமையம்மை பொறாது திருக்கைலாசமலையையடைந்து தக்கனது யாகத்தை யழிக்கவேண்டுமென்று சிவபெருமானைப் பிரார்த்தித்தார். அவர் அப்பொழுது தக்கனது யாகத்தையழிக்குமாறு நினைப்ப; அவருடைய நெற்றிக்கண்ணிலிருந்து வீரபத்திரக்கடவுள் தோன்றினர். அவர் ஆயிரம் சிரங்களை

யுடையவர். பின்பு உமையம்மையின் சினத்தில் காளிதோன்றி னள். அவள் வீரபத்திரக்கடவுளது சத்தியாயினள் அவர்கள். உமையம்மையைப்பணிய அவர் அவர்களைநோக்கித், "தக்கனிடம் அவியைப்பெற்று வருதிர்; இன்றேல் அவனுடையயாகத்தை யழிக் கக்கடவீர்" என்று பணித்தார். வீரபத்திரக்கடவுள் அதுகேட் டுத் தக்கனது யாகசாலையை யடைந்து அவன் சிவபெருமானுக்கு அவிகொடாதது கண்டு தேவர்களைநோக்கி, "இது உங்களுக்கும் இசைவோ" என்றுவினவி, அவர்கள் ஊமர்போலிருப்ப; அவர்க ளுள்ளே விஷ்ணுவைத் தண்டினால்புடைத்து,பிரமதேவரைக்குட்டி, தாளால் சந்திரனைத் தேய்த்தபின், தக்கனது சிரசையறுத்து அக் கினியிலிட்டுத் தகித்து மறையவர்களையும் இவ்வாறு தண்டித்து யாகசாலையை யழித்தார். அப்பொழுது விஷ்ணுமூர்த்தி அவருடன் பொருதற்கெழுந்தார். சிவபெருமானருளால் ஓரிரதமாண்டுவரப் பிரமதேவர் வீரபத்திரக்கடவுளுக்குச் சாரதியாய் அவ்விரதத்தை யுய்த்தார். விஷ்ணு வீரபத்திரக்கடவுளை நோக்கித் "தக்கனைத்தடிந் ததேயல்லால் தேவர்களையும் வதைத்ததெவன்கருதி" என்று வை... வில்... ளைத்து நாண்பூட்டிச் சரமாரி பொழிந்தார். வீரபத் திரக்கடவுளும் சரமாரி பொழிந்து அவரது வாகனமாகிய கருட னின் சிறகையரிந்தார். அப்பொழுது விஷ்ணுமூர்த்தி சக்கரத்தைச் செலுத்தினர். வீரபத்திரக்கடவுள் அதனைப்பிடித்துண்டார். விஷ் ணுமூர்த்தி வாட்படை பிடித்தெதிர் நோக்கிவர; வீரபத்திரக்கட வுள், "உம்" என்றுருத்தார். அப்பொழுது, அசரீரி "சினவேல்" என்றுசொல்ல விஷ்ணுமூர்த்தி அவரைவணங்கி "எனதுபிழையைப் பொறுத்தி." என்று பிரார்த்தித்தார். அப்பொழுது சிவபெரு மான் உமாதேவி பாகராய் இடபத்தின்மீது காட்சிகொடுத்தார். வீரபத்திரரும் விஷ்ணுவும் அவரைத்தொழுதார்கள். உமையம்மை சிவபெருமானைத் தேவர்கள் எழுமாறருள்புரிய வேண்டுமென் றிரப்ப அவர் வீரபத்திரக்கடவுளால் அவர்களை யெழுப்பியருளி னர். அவர்கள் நித்திரை நீங்குபவர்கள் போல் எழுந்து சிவபெரு மானையும் உமையம்மையையும் வணங்கினர்கள். பிரமதேவர் தமது புதல்வனாகிய தக்கனைக்காணாது சிவபெருமானை வணங்கி அவன் எழவேண்டுமென்று பிரார்த்தித்தார். சிவபெருமான் வீரபத்தி ரக்கடவுள்மீது அருள்பாலிக்க அவர் அவனை ஆட்டுத்தலை

புணர்த்தி எழுப்பினார். தக்கன் எழுந்து நமஸ்கரித்துச் சிவபெருமானைப் போற்றிவணங்கினான். அவர் உமாதேவியுடன் அவர்களுக்கு அருள்புரிந்து வீரபத்திரக்கடவுளுடனும் காளியுடனும் மறைந்தருளினார் தக்கன் காசியிற் சென்று ஆயிரம் வருஷம் சிவபெருமானை அருச்சித்து சிவகணநாத பதவியைப்பெற்றான். மற்றைய தேவர்களும் சிவபெருமானை அருச்சித்து வணங்கினார்கள். என்றிவையெல்லாவற்றையும் வியாழன் சயந்தனுக்குக் கூறினார். நிற்க.

முசுகுந்தச் சக்கரவர்த்தி வசிஷ்டமுனிவர் உபதேசித்தச் சுப்பிரமணியக்கடவுளுடைய விரதங்களாகிய வெள்ளிக்கிழமை திருக்கார்த்திகை கந்தஷஷ்டி என்பனவற்றின் மான்மியங்களை யுணர்ந்து அவற்றை யநுஷ்டித்துப் பூமிமுழுதிலும் தன்னாணை செலுத்திச் சுவர்க்கலோகத்திலிருந்து சத்தவிடங்கர் [illegible] கொணர்ந்து திருவாரூர் முதலிய எழுதலங்களிற் பிரதிஷ்டைபுரிந்து பரமகதியடைந்தார். நிற்க.

தொண்டைநாட்டிலே மேற்பாடியிலே வள்ளிமலையின்மேல் சிவமுனிவர் தவஞ்செய்கையில் ஒரு பெண்மான் ஆண்டுலந்தது. சிவமுனிவர் அதனைக்கண்டு விரும்பிநோக்க அது கருவுற்று வள்ளிக்கிழங்ககழ்ந்த குழியில் ஒரு பெண்மகவையீன்று வெருட்சியடைந்து ஓடியது. வேடர்களுக்கு அரசனாகிய நம்பி ஆண்டுவந்து அம்மகவை எடுத்து மனையிற்சென்று வள்ளியெனப்பெயரிட்டு வளர்த்தான். வள்ளிநாயகியம்மைக்குப் பன்னீராட்டைப்பருவம் வந்தபொழுது தந்தையாகிய நம்பி அவரைத் தினைப்புனங்காப்ப வைத்தான். அப்பொழுது திருத்தணிகைமலையிற்சென்று சுப்பிரமணியக்கடவுளிடம் வள்ளிநாயகியம்மை தினைப்புனங்காப்பதைநாரதமுனிவர்கூறக்கேட்டுஅவர்வேடுவர்போலவுருக்கொண்டுவள்ளிமலையிற்சென்று வள்ளிநாயகியம்மையைக்கண்டு விரகவுரைபல கூறியருளினர். அப்பொழுது வேடுவரோடு நம்பி ஆண்டுவாலும் அவர் வேங்கைமரவடிவுகொண்டு நிற்க; வேடுவர் "இது முன்னரில்லை; பறித்துமுறித்திர்" என்று தம்முட்புகன்றனர். நம்பி "இது வள்ளிக்குத் துணையாய் நிற்குக." என உரைத்து அவர்களுடன் சென்

களால் அக்கினிதேவனையட்டருளினர். இதனைக்கண்ட தேவர்கள் அஞ்சி ஓடினர்கள்.

நாரதமுனிவர், இதனைக்கண்டு வியாழபகவான் இருக்குமிடத்தையடைந்து அவருக்குவிண்ணப்பஞ்செய்ய; அவர் சுப்பிரமணியக்கடவுளின் போர்க்களத்தையடைந்து வணங்கி, "தேவர்கள், தேவரீரை அறியாமற்செய்த பிழையைப்பொறுக்கவேண்டு" மென்று விண்ணப்பஞ்செய்யச் சுப்பிரமணியக்கடவுள் அதற்கிசைந்து துயிலெழுந்தார்போல் தேவர்கள் எழுமாறு அருள்செய்தார். அவர்கள், சுப்பிரமணியக்கடவுளை வணங்கி, "அடியேம் தேவரீரை உணராது பொரவந்தேம்; பொறுத்தருளவேண்டு" மென்று பிரார்த்தித்தார்கள். சுப்பிரமணியக்கடவுள், அவர்களை நோக்கி, "அஞ்சலிர்" என்று தேற்றி, "நீவிர், எம்மையுணராது இவ்வண்ணம் செய்தீர்; எம்மையறிவீர்களாக" என்று விசுவரூபங்கொண்டருளினர். தேவர்கள், சுப்பிரமணியக்கடவுள் சிவபெருமானின் வேறல்லர் என்பதும் அவர்சர்வவியாபி என்பதும் உணர்ந்து உய்த்தார்கள் சுப்பிரமணியக்கடவுள் தமது திருவிளையாடலால் மாறுற்ற வெல்லாவற்றையும் முன்போற்றோன்றுமாறு அருள்செய்து கந்தவெற்பினையடைந்தார். தேவர்கள் அங்கே அவரைவழிபட்டார்கள்.

பின்பு, நாரதமுனிவர், ஒருவேள்விசெய்ய அதினின்று கொடிய ஆடொன்றுதோன்றி உயிர்களையழித்தது. தேவர்களும் நாரதமுனிவரும் அதனைக்கண்டு அஞ்சித் திருக்கைலாசமலைக்குச் சென்று அங்கே சுப்பிரமணியக்கடவுளைக்கண்டு, "இவர் நம்குறை முடிக்கவல்லவர்" என்று துணிந்து அவரிடம்விண்ணப்பஞ்செய்தார்கள். சுப்பிரமணியக்கடவுள் வீரவாகுதேவரை நோக்கி "நீ, அந்த ஆட்டையடக்கி இங்கேகொணர்தி" என்று ஆஞ்ஞாபித்தார். வீரவாகுதேவர்சென்று அவ்வாட்டினைப் பிடித்து வலிமடித்துச் சுப்பிரமணியக்கடவுள்முன்னிலையிலுய்த்து வணங்கினர். சுப்பிரமணியக்கடவுள் நாரதரைவேள்விசெய்ப அருளிச்செய்து ஆன்மாக்

கள் உய்யும் பொருட்டுப் பலதிருவிளையாடல்களைச் செய்து கோபுர வாயிலில் எழுந்தருளியிருந்தார்.

ஒருநாள், பிரமதேவர் திருக்கைலாச மலையையடைந்து சிவ பெருமானைத் தரிசனஞ்செய்து வணங்கிக்கொண்டு வாயிலை அடைந்தார். சுப்பிரமணியக்கடவுள் அவரைக்கண்டு, "பிரமதேவரே, நம் முன்வருதிர்" என்று அருளிச்செய்ய; அவர்வந்து எம்பெருமானைவணங்காது புகழ்ந்து தோத்திரஞ்செய்தார். எம்பெருமான் அவரைநோக்கி, "நீ செய்யுந்தொழில்யாது?" என்று வினவ; அவர், "நான் படைத்தற்றொழில்செய்வேன்" என்றார். சுப்பிரமணியக்கடவுள் அவரைநோக்கி,"உனக்கு வேதம்வருமா?" என்று வினவியருள; அவர் "வரும்" என்று சொல்லி முதலில் "அரிஓம்" என்று பிரணவத்தைச்சொல்லித்தொடங்குதலும்; சுப்பிரமணியக்கடவுள், "முதலில் இப்பிரணவத்துக்கு அர்த்தம் சொல்லிப்பின் வேதம் சொல்வீர்" என்றருள; அதனைக்கேட்டுப் பிரமதேவர் பொருளறியாமையால் மயங்கச் சுப்பிரமணியக்கடவுள் அவருடைய சிரசிற்குட்டிச் சிறையிலிட்டு உலகத்தைப் பலகாலம் படைத்தார்.

இந்திரன் முதலிய தேவர்களும் விஷ்ணுமூர்த்தியும் ஒருநாட் திருக்கைலாசமலையையடைந்து சிவபெருமானைவணங்கிப் பிரமதேவரைச் சுப்பிரமணியக்கடவுள்சிறையிட்டதைவிண்ணப்பஞ் செய்தார்கள். சிவபெருமான், அதனைக்கேட்டுத் திருநந்திதேவரை யனுப்பிப் பிரமதேவரைச் சிறை நீக்குமாறு சொல்லியருளினார். திருநந்திதேவர்விண்ணப்பித்ததைக்கேட்ட சுப்பிரமணியக்கடவுள் "உன்னையும் சிறையிடுதும்" என்று அருளிச்செய்ய; அவர் அஞ்சிச் சிவபெருமானிருக்குமிடத்தை அடைந்து நிகழ்ந்ததை விண்ணப்பஞ்செய்தார் சிவபெருமான்பின் கந்தவெற்பையடைந்து பிரமதேவரைச் சிறை நீக்கித் தமது திருக்குமாரரைக் கவானில் வைத்து, "மைந்தனே, பிரணவப்பொருளை உரைத்தி" என்று அருளிச்செய்து அவர்சொல்லக்கேட்டுத் தமதிடத்தையடைந்தார். சுப்பிரமணியக்கடவுள், பின் அப்பிரணவப்பொருளை அகத்திய முனிவருக்கு உபதேசித்தார்.

சுப்பிரமணியக்கடவுள் வளர்ந்த சரவணதடாகத்தில் அமுதவல்லி என்பவரும் சுந்தரவல்லி என்பவரும் தவஞ்செய்து சுப்பிரமணியக்கடவுள் தம்மை மணம்புரியுமாறு பிரார்த்தித்தார்கள். சுப்பிரமணியக்கடவுள் அவர்களுக்குத்தோன்றி, "யாம் பின் உங்களைமணம் புரிவோம்; நீங்கள் இந்திரனிடத்தும் வேடரிடத்தும் முறையேசென்று புத்திரிகளாக வளரக்கடவீர்கள்" என்றருளிச் செய்து அந்தர்த்தானமாயினர்.

ஒருநாள், அரிபிரமேந்திராதி தேவர்கள் திருக்கைலாசமலையையடைந்து சிவபெருமானைத் தோத்திரஞ்செய்து வணங்கிச் சூரபன்மனை வதைக்குமாறு பிரார்த்தித்தார்கள். அப்பொழுது சிவபெருமான் பதினொருருத்திரர்களையும் பதினொருபடைகளாக்கி அவற்றையும் வேலாயுதத்தையும் சுப்பிரமணியக்கடவுளது கரத்திலே கொடுத்து, ஓரிலக்கம் வீரர்களையும் நவவீரர்களையும் பூதர்களையும் சேனைகளாக்கி ஓரிரதத்தையும் கொடுத்தருளி, "நீ சென்று சூரபன்மன்முதலிய அசுரர்களைவதைத்துத் தேவர்களைக்காத்தி" என்றருளிச்செய்தார்.

பின்பு,சுப்பிரமணியக்கடவுள் விடைபெற்றுக்கொண்டுதேவர்களும் சேனைகளும் புடைசூழத்திருக்கைலாசமலையைவிட்டு நீங்கிப் பூலோகத்துக்குவந்து; நாரதமுனிவர்கிரௌஞ்சமலையைக்காட்டி, "இதில் மாயாநகரில் அசுரசேனையுடன் தாரகன் அரசுபுரிகின்றான்" என்றுசொல்ல;வீரவாகுதேவர் முதலியநவவீரர்களையும் சேனைகளையும் நோக்கி, "நீவிர் சென்று பொருதிர்" என்றருளிச்செய்தார். அவர்கள் அங்ஙனமே சென்று பொருதனர். அசுரர்கள்மடிந்தனர்; வீரகேசரி தாரகனது மகுடத்தைவிழ வெய்தார்; இருதிறத்துச் சேனைகளும் தீரமுடன் பொருதன, பின் தாரகன் மாயப்போர்செய்யவெண்ணிக்கிரவுஞ்சகிரியிற்சென்று ஒளித்தனன். வீரவாகுதேவர் முதலியவர்களும் அவன்பின் சென்று மயங்கிக் கிடந்தனர். தாரகன் யுத்தகளமடைந்து எஞ்சியிருந்த தேவசேனைகள்மீது கணைமாரிதூவ அவர்கள் அஞ்சி ஓடினர்.

நாரதமுனிவர், சுப்பிரமணியக்கடவுளையடைந்து நிகழ்ந்ததை விண்ணப்பஞ்செய்தார். சுப்பிரமணியக்கடவுள் யுத்தசன்னத்தராய்ப் போர்க்களத்தையடைந்து அங்கேதோன்றினார். தாரகன் அவரை நோக்கி, "எம்முடன் போர்வந்தகாரணம்யாது?" என்று வினவினன். சுப்பிரமணிக்கடவுள் அவனைநோக்கி, "நீவிர் தேவரைச் சிறைபுரிந்தமையால் பொருதற்குவந்தோம்" என்றருளிச்செய்தார். தாரகன், "நன்று; நன்று;" என்றுசொல்லி ஆரவாரித்து வில்வளைத்து நாண்பூட்டியுத்தஞ் செய்தான். சுப்பிரமணியக்கடவுளும் வில்வளைத்துநாண்பூட்டி யுத்தஞ்செய்து தாரகனுடைய துதிக்கையையும் கோடுகளையும் அறுத்தருளினார். தாரகன் சினந்து ஆயிரம்சரங்களைத் தூண்டி சுப்பிரமணியக்கடவுளது தேரில் இருக்கும் துவசத்தை அறுத்தான். சுப்பிரமணியக்கடவுள் சரங்களைத் தூண்டித் தாரகனது வில்லையொடித்துத் தேரினைத்துகள் படுத்தியருளினார். தாரகன்பின்னும் ஒரிரதத்திலேறிச் சரமாரி தூவியுத்தஞ்செய்யச் சுப்பிரமணியக்கடவுள் தந்தேர்செலுத்தும்வாயுதேவன் அஞ்சினன். சுப்பிரமணியக்கடவுள், அதுகண்டு வேற்படையைநோக்கி, "நீசென்று தாரகனையும் அவன் சேனைகளையும் அழித்துக் கிரவுஞ்சகிரியைப்பிளந்து நவவீரர்களையும் தேவசேனைகளையும் எழுப்பிவருதி." என்றுகட்டளையிட; அது ஆரவாரித்துச்சென்று தாரகனையும் அவன்சேனைகளையும் அழித்துக் கிரவுஞ்சகிரியைப் பிளந்து வீரவாகுதேவர்முதலிய வீரர்களையும் மீட்டுக் கங்கையிற்சென்று நீராடிமீண்டது.

பின்பு, சுப்பிரமணியக்கடவுள் அவ்விடத்தைவிட்டு நீங்கித் தேவகிரியை அடைந்தருளினார். அப்பொழுது சூரியாஸ்தமயனமாயிற்று. அங்கே அரிபிரமேந்திராதி தேவர்கள் சுப்பிரமணியக் கடவுளைப் பூசித்துவணங்கினார்கள். தாரகாசுரன் இறந்ததுகேட்டு அவன்மனைவியாகிய சவுரி துயருற்று அக்கினிப்பிரவேசம்செய்தாள். அவனது புத்திரனாகிய அசுரேந்திரன் அவர்களுக்கு ஈமக்கடன் செய்து மகேந்திரபுரத்தையடைந்து சூரபன்மனுக்கு நிகழ்ந்தவற்றை உரைத்தான். சூரபன்மன் அதனைக்கேட்டு வெகுண்டு சுப்பிரமணியக்கடவுளின் செயலை அறியுமாறு ஒற்றரை விடுத்தான்.

மறுநாள், சுப்பிரமணியக்கடவுள் தேவர்கள் புடைசூழத்தேரிலேறி அவ்விடத்தைநீங்கித் திருக்கேதாரம், காசி, திருப்பருப்பதம், திருவேங்கடம், தக்ஷிணகைலாசம், திருவாலங்காடு, காஞ்சிபுரம் அருணாசலம், திருவெண்ணெய் நல்லூர், திருமுதுகுன்று, சிதம்பரம் என்பனவற்றைக்கடந்து சென்று மண்ணியாற்றங்கரையிலுள்ள திருச்சேய்ஞலூரையடைந்தருளினார். அப்பொழுது சூரியாஸ்தமயனமாயிற்று. சுப்பிரமணியக்கடவுள் தேவகம்மியனைக்கொண்டு அவ்விடத்தில் ஒருகோயிலைச்செய்து வீற்றிருந்தருளினார். அன்றிரவு, இந்திரன், முன் சீர்காழியில்சிவார்ச்சனை புரியும்பொருட்டு வருதற்குமுன் வைத்த அணிகலை ஒருதெய்வதம் மீட்டும் கொண்டுவந்து கொடுத்தது.

மறுநாள், சுப்பிரமணியக்கடவுள் சிவபெருமானை அருச்சித்து, அவரிடம் ஒருபடையினைப் பெற்றுக்கொண்டு, தேவர்கள் புடைசூழ இரதமீதேறி திருமயிலாடுதுறை, திருப்பழியனூர், திருவாரூர் என்பனவற்றைக் கடந்து பாலைவனத்திற் சென்றருளினார். அது குளிர்ந்தது. சுப்பிரமணியக்கடவுள் திருப்பரங்கிரியையடைந்து பராசரமுனிவருடைய ஆறுபுதல்வர்களுக்கும் அருள்புரிந்து தேவர்களோடும் திருச்செந்தூரையடைந்து, தேவகம்மியனைக் கொண்டு ஓராலயமியற்றுவித்துத் தேவர்கள் புடைசூழ வீற்றிருந்தருளினார். பின் அவர் இந்திரனைநோக்கி, "சூரபன்மனுடைய வரலாற்றையுரைத்தி' என்று கட்டளையிட; அவன்வியாழபகவானை நோக்கி, "நீரே சொல்லவேண்டும்" என்றுசொல்ல; அவர் சுப்பிரமணியக்கடவுளைத் தோத்திரஞ்செய்து வணங்கிச் சொல்லுவாராயினார்.

உற்பத்திகாண்டம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

# உ. அசுரகாண்டம்.

காசிபமுனிவரது புத்திரர்களாகத்தோன்றிய அசுரர்களுக்கெல்லாம் அரசனாகிய அசுரேந்திரன் என்பவன் சுரசை என்னும் புதல்வியைப்பெற்றான். அவளுக்குச் சுக்கிராசாரியர் மாயங்களைப் போதித்து, "மாயை" எனனும் பெயரைச் சூட்டி, அவளை நோக்கி, முன்திருநந்திதேவர் தேவர்களுக்கிட்டசாபத்தை நினைந்து, "நங்கையே, திருமால்முதலியதேவர்களால் உன்குலத்து அசுரர்கள் இறந்தனர்; நீ காசிப முனிவரையடைந்து புதல்வரைப்பெறுதி" என்று உபதேசிக்க; அவள் "நன்று" என்று சொல்லி, மேருமலையின் வடபாலில் அவருடைய ஆச்சிரமத்தையடைந்து, ஆசைபூட்டி, "எவ்வடிவு நான் கொள்ளுவேனோ அவ்வடிவத்தையே கொள்ளுதிர்" என்று சொல்லி, முதற்சாமத்தில் இருவரும் ஒரு தேவவடிவங்கொண்டு புணர்ந்தனர். அப்பொழுது அவர்களுடையவெயர்விலிருந்து முப்பதினாயிரம் வெள்ளம் அசுரர்களும் சூரபன்மனும் * பிறந்தார்கள். இரண்டாஞ் சாமத்தில் சிங்கவடிவுகொண்டு புணர்ந்தார்கள். அவர்களுடைய வெயர்விலிருந்து நாற்பதினாயிரம் அசுரர்களும் ஆயிரந்தலைகளையுடைய சிங்கமுகாசுரனும் பிறந்தார்கள். மூன்றாஞ்சாமத்தில் இருவரும் யானைவடிவுகொண்டு புணர்ந்தார்கள். அவர்களுடைய வெயர்விலிருந்து நாற்பதினாயிரம் வெள்ளம் அசுரர்களும் யானைமுகமுடைய தாரகனும் பிறந்தார்கள். நான்காஞ்சாமத்தில் இருவரும் ஆட்டுவடிவங்கொண்டு புணர, அவர்களுடைய வெயர்விலிருந்து யாளிமுதலியவிலங்குகளின் அங்கங்களைக்கொண்டமுப்பதினாயிரம் அசுரர்களும் அசமுகி என்பவளும் பிறந்தார்கள்.

பின்பு, சூரியோதயமாக, சூரபன்மனும் அசுரர்களும் காசிப முனிவருடைய திருவடிகளை வணங்கி, "யாது செய்யவேண்டும்" என்று வினவ; அவர் மார்க்கண்டேய முனிவரது சரித்திரத்தை

* இவனுடைய முகம் குதிரைமுகம்.

உபதேசித்து, "தவத்தினால் அவர் யமனையும் வென்றனர்; நீவிரும் தவம்புரிதிர்" என்றனர். மாயை அதுகேட்டு மறுத்து, "மைந்தர்களே, அதிகபராக்கிரமத்தையும் செல்வத்தையும் பெறச் சிவபெருமானை நோக்கித்தவம்புரிதிர்" என்றுசொல்ல; அவ்வாறே சூரபன்மன் அசுரசேனையுடைசூழ வடபுலத்திற் சென்று சுக்கிராசாரியர் யாகம்செய்யுநெறியை உபதேசிக்க ஒருயாகசாலை செய்து அதில் பதினாயிரம் வருஷம் தவஞ்செய்தான் இவ்வளவுகாலம்தவம்செய்தும் சிவபெருமான் அவனுக்கும் அவன் தம்பியர்க்கும் தோன்றியருள்செய்தாரல்லர். சூரபன்மன் வருந்தி அந்தரத்தெழுந்து தன் தசைகளையரிந்து ஆகுதி செய்து தவம்புரிந்த பின்னும் சிவபெருமான் தோன்றினாரல்லர். சூரபன்மன் மனங்கவன்று யாகாக்கினியில் வீழ்ந்திறந்தான். சிங்கமுகாசுரன் அது கண்டு தன் தசைகளையரிந்து ஆகுதிசெய்து அக்கினியில் வீழ்ந்து இறக்கவெண்ணச் சிவபெருமான் முதுவேதியவடிவங்கொண்டெழுந்தருளிச் சூரபன்மனை எழுப்பி; ஆகாயத்தில் உமாதேவிபாகங்கொண்டு இடபாரூடராய்த் தோன்றியருளினர்.

சூரபன்மனும், சிங்கமுகாசுரனும், தாரகாசுரனும் சிவபெருமானைத் தெரிசித்து வணங்கி, பரவசப்பட்டு நின்றார்கள். சிவபெருமான் சூரபன்மனை நோக்கி, "நீ நெடுங்காலம் அரியதவம் புரிந்தாய் உனக்குவேண்டும் வரம்யாது" என்றுவினவினர். சூரபன்மன் மீண்டும் அவரைவணங்கி, "சுவாமீ, பல அண்டங்களையும் அரசாளவேண்டும்; அழியாமல் இருக்கவேண்டும்" என்று வணங்கினான். சிவபெருமான் அதனைக்கேட்டு, "ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டுகம் அரசாளுதி" என்றுவரங்கொடுத்து, இந்திரஞாலத்தேரையும் ஆஞ்ஞாசக்கரத்தையும் அருளி வேறுபடைகளையும் ஊர்திகளையும் கொடுத்து, அவ்வாறே சிங்கமுகாசுரனும் தாரகாசுரனும் வணங்க அவர்களையும் "நூற்றெட்டுகம்வாழுதிர்" என்று படைகளையும் ஊர்திகளையும் கொடுத்து "நீவிர் நம்சத்தியொன்றாலேயே அழிவீர்கள்" என்று அருளிச்செய்து அந்தர்த்தானமாயினர்.

சூரபன்மன், அதன்பின்பு காசிபமுனிவரிடம் சென்று வணங்கிப்பின்குருவாகிய சுக்கிராசாரியரை அடைந்துநமஸ்கரித்து நிகழ்ந்தவற்றை விண்ணப்பஞ்செய்தான். சுக்கிராசாரியர் அவனுக்கு மாயாவாதமதத்தை உபதேசித்து, "அரிபிரமேந்திராதி தேவர்களை வருத்துதி; அவர்கள் உங்களுக்குப் பகைவர்கள்; சிறப்புடன் வாழுதி" என்று ஆயிரத்தெட்டு அண்டத்தினளவையும் உபதேசித்தார். சூரபன்மன் பின் தம்பியர்களோடும் சேனைகளோடும் திக்குகள்தோறும்சென்று திக்குப்பாலகர்களைவென்று விஷ்ணுமூர்த்தி அறிதுயில் புரியும் திருப்பாற்சமுத்திரத்தையடைந்தான். விஷ்ணுமூர்த்தி எதிர்த்துத்தாரகாசுரனுடன்பொருது அவனுடைய இரதத்தைத் துகள்புரிந்து யுத்தம் செய்தார், தாரகாசுரன் ஆற்றலுடன் யுத்தம்செய்து விஷ்ணுமூர்த்தி செலுத்திய சக்கரப்படையைத் தனது கண்டத்திலே தாங்கினன். விஷ்ணுமூர்த்தி அதனைக் கண்டு அச்சமடைந்து அவர்களை ஆசீர்வதித்து அனுப்பினர். சூரபன்மனும் தம்பியர்களும் சேனைகளும், சூரியன்முதலியவர்கள் வணங்கச் சுவர்க்கலோகத்தை நோக்கிச்சென்றார்கள்.

இந்திரன், சில ஒற்றர்கள் சூரபன்மன் போர்க்கெழுந்துவருவதையுரைப்பச் சசிதேவியுடன் குயிலுருக்கொண்டு ஒளித்துச் சென்றான். தேவர்கள் சூரபன்மனால் வருந்தி அவனைப் புகழ்ந்தார்கள். சூரபன்மன் அவர்களை விட்டு மகலோகம் முதலியவற்றிற் சென்று அங்கங்குள்ளவர்கள் வழுத்த சத்தியவுலகத்தையடைந்து பிரமதேவர் அஞ்சி ஆசீர்வதிக்க மற்றையவுலகங்களையுங் கடந்து சிவலோகத்திற்சென்று சிவபெருமானைத் தோத்திரஞ்செய்து வணங்கி மற்றைய வண்டங்களையும் வென்று பூலோகத்துக்குவந்து மகேந்திரபுரி ஆசுரபுரி மாயாபுரி என்னும் நகரங்களைச் செய்வித்து, அரிபிரமேந்திராதி தேவர்கள் குற்றேவல்புரிய; அவற்றுள் மகேந்திர புரிதனக்கும். ஆசுரபுரி சிங்கமுகாசுரனுக்கும் மாயாபுரி தாரகாசுரனுக்குமாக வகுத்து அசுரர்கள் புடைசூழ முடிபுனைந்து அரசுசெய்திருந்தான்.

பின்பு, சூரபன்மன் தேவகம்மியனது புத்திரியாகிய பதுமகோமளையை மணம்புரிந்து, சிங்கமுகாசுரனுக்கு யமனுடையபுத்

றனன். சுப்பிரமணியக்கடவுள் முன்போற்றோன்றி வள்ளிநாயகியைநோக்கி, "உன்னையன்றித் தஞ்சமில்லை; என்னையாளுதி" என்றருளிச்செய்தனர். அப்பொழுதும் நம்பி வேடுவருடன் ஆண்டு வந்தனன். சுப்பிரமணியக்கடவுள் அதனைக்கண்டு சைவ விருத்த வடிவுகொண்டு அவன் நேர்போய் திருநீறுகொடுத்து ஆசியுரைப்ப; அப்பொழுது நம்பி, "சுவாமீ, ஈண்டுவந்ததெது உரைத்தருளவேண்டும்." என்று விண்ணப்பஞ்செய்தான். அவர், அது கேட்டு "நாம் இம்மலையிற்குமரியாடுதற்கு வந்தனம்" என்றருளிச்செய்தனர். நம்பி, "அது ஆடுதற்கு நம் புதல்வியுடனிருத்திர்." என்றுரைத்து ஆண்டுவைத்து நீங்கினன். [illegible]ருத்தனாக வந்த சுப்பிரமணியக்கடவுள் வள்ளிநாயகியை நோக்கி [illegible] விடாயுடையேன்." என்றுரைத்து அவருடன் ஒருசுனையி[illegible]ன்று நீருண்டு பின்னும் வள்ளிநாயகியைநோக்கி, "நீர்விடாயக[illegible]ினை; காதலையும் அகற்றுதி." என்றருளிச்செய்ய; அவர் நாணி ஒரு[illegible] சென்றனர். அப்பொழுது சுப்பிரமணியக்கடவுள் விநாயகக்[illegible] நினைக்க; அவர் யானையுருக்கொண்டு மதம்பில்க[illegible] மரங்களையொடித்து ஆண்டுவந்தனர். வள்ளிந[illegible] வுளின் யானையுருவத்தைக் கண்டஞ்சிச் சு[illegible] தழுவி "இசைந்தேன்; இசைந்தேன்[illegible]ழ்ந்தவாறு [illegible] வுள் யானையுருவத்துடன் அப்பாற்சென்று[illegible] கடவுள் வள்ளிநாயகியம்மையைப் புணர்ந்து தமது திருக்கோலத்தைக் காட்டித் தினைப்புனத்திற்செல்ல அவருக்கு விடைகொடுத்தருளினர். தோழி, வள்ளிநாயகி தினைப்புனத்தில் வருதல் கண்டு, "எங்ஙன் சென்றனை." என்றனள். வள்ளிநாயகி "சுனையாடச்சென்றேன்." என்றனர். தோழி "மேனிவியர்ப்ப, முலை பூரிப்ப, வாய்சிவப்ப ஆடும் சுனையாண்டுளது." என்று [illegible]வினள். அவ்வமயம் சுப்பிரமணியக்கடவுள் வேடுருக்கொ[illegible]டு வந்து, "மதம்பில்கும் யானையொன்று எம் அம்புதுளைத்தபடி இரத்தஞ்சொரிய ஈண்டுவந்ததோ." என்றனர். தோழி, அவர் வள்ளிநாயகியோடு புணர்ந்ததை அவர்கள் பார்வையினுணர்ந்து அயற்புனத்தையடைய; சுப்பிரமணியக்கடவுள் ஆண்டுச்சென்று, "வள்ளியையீகுதி; அல்லது மடலேறுவன்." என்றனர். தோழி

அதற்கிசைந்து வள்ளிநாயகியைக் கொண்டுவந்து அவரிடம் விட்டனள். அவர் வள்ளிநாயகியுடன் கலவித்தொழில் புரிந்து விடை கொடுப்ப; அவரும் தோழியும் சென்று தினைகாத்திருந்தனர்.

தினை நடிந்தபின் வள்ளிநாயகி இற்செறிக்கப்பட்டனர். சுப்பிரமணியக்கடவுள் அவரைநாடிப் புலம்பி இரவில் இற்புறமடைந்தனர். சேடி வள்ளிநாயகியைக்கொண்டுவந்து, "இவளைக்காத்தருள்." என்றுரைத்துவிட்டு நீங்கினள். சுப்பிரமணியக்கடவுள் வள்ளிநாயகியை ஒருசோலையிலிட்டுச் சென்றிருந்தனர். அப்பொழுது வைகறையாயி . நம்பி வள்ளிநாயகியைத் தேடிக்காணாது வேடருடன் ஆண் சுப்பிரமணியக்கடவுள் மீது கணைமாரி தூவினன். அப்பொ சுப்பிரமணியக்கடவுளின் கரத்திலிருந்த கொடியாகிய வியது. அதனால், நம்பியும் வேடர்களுமிறந்தார்கள். நாரதமுனிவர் ஆண்டுவந்து வேண்ட வள்ளிநாயகியால் சுப்பிரமணியக்கடவுள் அருள்சுரந்தனர். நம்பி ழுந்து சுப்பிரமணியக்கடவுளைத் தெரி ந்து னைக்குவந்து வள்ளி யகியை மணந்து சொல்ல அவர் இயைந்தருளினர். நம்பி தன்மனையையடைந்து திருமணமண்டபம் இயற்றுவித்து ஆங்குச் சுப்பிரமணியக்கடவுள் எழுந்தருள தனதுபுதல்வியாகிய வள்ளிநாயகியைக் கரம்பற்றிச் அவரது கரத்துள்வைத்துப் புனலுய்த்து தத்தஞ்செய்தான். நாரதமுனிவர் மணச்சடங்குசெய்தனர். பிரமா விஷ்ணு முதலிய தேவர்களும் சிவபெருமானும் வந்தனர். சுப்பிரம க்கடவுள் சிவபெருமானை வணங்கித் தேவர்களுக்கருள்சுரந்தனர். திருக்கல்யாணச்சடங்கு முடிந்தபின் சுப்பிரமணியக்கடவுள் நம்பியை ஆண்டிருத்தித் திருத்தணிகைமலையையடைந்தருளினர். தேவர்கள் தங்கள் பதமடைந்தார்கள். சுப்பிரமணியக் கடவுள் வள்ளிநாயகியம்மைக்குத் திருத்தணிகைமலையின் மேன்மை யுபதேசித்து அவருடன் கந்தவெற்பையடைந்து அவரும்

தெய்வநாயகியம்மையும் முறையே கிரியாசத்தியாகவும் ஞானசத்தியாகவும் அவர்களுக்குப் பூர்வஜன்ம வரலாற்றை யுபதேசித்து ஆன்மாக்களுக்கு அருள்சுரந்து வீற்றிருந்தருளினார். தகரும் மயூரமும் வாகனமாயின. சேவல் கொடியாயிற்று. வேற்படை இச்சாசத்தியாயிற்று.

---

## வாழ்த்து.

வேல்வாழி மயில்வாழி சேவல்வாழி
வேறுமுள படைவாழி விளங்குதண்டைக்
கால்வாழி யருள்பொழியும் விழிகள்வாழி
கவின்குலவு மீராறு கரங்கள்வாழி
மால்வாழி வாழியெனப் பணிந்துவாழ்த்து
மலைமாது தருமுருகன் மகிழ்ந்தவாறு
பால்வாழி யெனையாளுங் கருணைவாழி
பங்கிருந்த மங்கையர்தம் பதங்கள்வாழி.

## வேறு.

ஆதி வாழிய வஞ்செழுத் தோடுவெண்
பூதி வாழிய பூசுரர் * வாழிய
நீதி வாழிய நீள்புவி வாழிய
கோதில் சைவக் குலமிக வாழியே.

---

* "புண்ணியர்" என்றுபாடமோதுவாரு முளர்.

## வேறு.

துய்யதோர் மறைக ளாலும்
துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க
சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட
வேற்படை வாழ்க வன்னான்
பொய்யில்லா ரடியார் வாழ்க
வாழ்கவிப் புவன மெல்லாம் *

---

தக்ஷகாண்டம் முற்றிற்று.

கந்தபுராணச்சுருக்கம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் திருவடிவாழ்க.

---

* இவ்வறுசீர் விருத்தத்தை நாற்சீர் விருத்தமா[illegible], "துய்யதோர்" என்பதனைத் "துய்பதா" மென்றும் "துதித்திடற் [illegible]" என்பதனைத் "துதித்திட வரியதான" என்றும் "செய்யபேரடிகள்" என்பதனைச் "செய்யவேலடிகள்" என்றும் பாடபேத[illegible]வாரு முளர்.

கந்தபுராணம் சுருக்கம் எனும் இந்நூலை எழுதியவர் வட்டுக் கோட்டை தெக்கணப்பாய் ஸ்ரீகண் ணலிங்கசுவாமி கோவில் பிரதம குருவும் அறங்காவலருமான பிரம்ம ஸ்ரீ க.குருமூர்த்தி ஐயர் ஆவார். இவர் மிகச்சிறந்த தமிழறிஞர். சுன்னாகம் ஸ்ரீ அ.குமார சுவாமிப் புலவர், நல்லூர் ஸ்ரீ த.கைலாச பிள்ளை ஆகியோரின் மாணாக் கராவார். வீரசோழியம் எனும் இலக்கண நூலை விளக்கக் குறிப் புடன் பதிப்பித்தவர். சிறந்த உரையாசிரியர் சம்ஸ்கிருத மொழியை நன்கறிந்தவர். இவர் (கலி.5031) 1929 ஆம் ஆண்டில் பதிப்பித்து வெளியிட்ட இந்நூல் கிடைப்பது மிகவும் அரிதானதாகும். அந்நூலை 89 ஆண்டுகளின் பின் அதே வடிவில் பதிப்பித்து வெளியி டுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.